விலை ரூபா 1-25

# ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 27 கார்த்திகை 20 ராபி அவ் 22 இதழ் 298
யாழ்ப்பாணம் வியாழக்கிழமை 5-12-1985

## "சர்வதேச மன்னிப்புச்சபை அறிக்கை பிழையானது"

### கலாநிதி விக்கிரமவீரசூரியாமறுப்பு

(கொழும்பு)
இலங்கையில் சித்திரவதை இடம்பெற்றுள்ளதாக வெளியான சர்வதேச மன்னிப்புச் சபையின் அறிக்கை; பிழையானதும், பொய்யானதும் என்று நிரூபிக்கப்பட்டுள்ளதாக அரச தரப்பில் தெரிவிக்கப்படுள்ளது.

(5ம் பக்கம் பார்க்க)

## நாளை மறுதினம் ஜி. ஸி. ஈ. பரீட்சை: அவல நிலையில் மூதூர் மாணவர்கள்!

(திருகோணமலை)
மூதூர்பகுதியிலுள்ள பாடசாலை மாணவர்கள், நாளை மறுதினம் நடைபெறவுள்ள க. பொ. த. பரீட்சைக்குத் தோற்ற முடியாத அவலநிலை தோன்றியுள்ளது.

இம்மாதம் 7-ம் திகதி க. பொ. த. பரீட்சை

(5-ம் பக்கம் பார்க்க)

● பிரிட்டிஷ் பத்திரிகையாளர் இருவரின் மர்மவிஜயம்

# திருமலைத் தகவல்கள் குறித்து பாதுகாப்பு வட்டாரம் அதிர்ச்சி!

(கொழும்பு)

**பிரிட்டிஷ் பத்திரிகையாளர் இருவரின் இலங்கை விஜயமும், அவர்களது சிறப்புக் கட்டுரையும் இலங்கை பாதுகாப்பு வட்டாரங்களில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது!**

**மர்மமான முறையில் இலங்கையில் நடமாடி; பிரிட்டிஷ் பத்திரிகையிலும், பிரிட்டிஷ் ஒலிபரப்பு கூட்டுத்தாபனத்திலும் திருகோணமலைச் சம்பவங்கள் பற்றி ஆதார பூர்வமாக அளித்திருக்கும் விளக்கங்கள் குறித்து இப்பொழுது பூரண விசாரணை நடைபெற்று வருகிறது.**

பிரிட்டிஷ் பத்திரிகையாளர்களான செல்வி அலிஸன் போர்ட் ரியோஸ் என்பவரும் திரு. ரிம் என்பவரும் கடந்த மாதம் இலங்கைக்கு விஜயம் செய்து, திருகோணமலையில் மூன்று வாரங்கள் தமிழ்த் தீவிரவாதிகளுடன் தங்கியிருந்து திருகோணமலை, நிலாவெளி நாவல்வத்தை சம்பவங்கள் உட்பட பல முக்கிய சம்பவங்களை தொலைக்காட்சியில் படம் எடுத்துள்ளதுடன் இது சம்பந்தமான பரபரப்பான கட்டுரையொன்றை பிரிட்

(8ம் பக்கம் பார்க்க)

## லொறிகளில் வழிப்பறி மீண்டும் நடக்கிறது

(மதவாச்சி)
யாழ்ப்பாணத்துக்கும் கொழும்புக்குமிடையே வர்த்தகத் தொழிலில் ஈடுபட்டு வரும் லொறிகளிலுள்ள பொருட்கள் மதவாச்யிசிலுள்ள புனவ என்னுமிடத்தில் வைத்துக்கொள்ளை அடிக்கப்படும் சம்பவம் மீண்டும் தலைதூக்கியுள்ளது.

இவ்வழிப்பறிக் கொள்ளைச் சம்பவத்தால், பொருட்கள் ஏற்றி இறக்கும் வேலைகளில் ஈடுபடும் லொறிகளின் உரிமையாளர்கள் அச்சமடைந்துள்ளனர்.

வழிப்பறிக்கொள்ளையில் ஈடு

(5ம் பக்கம் பார்க்க)

## அப்பாவிதமிழரைகொல்வது கோழைத்தனம்'

### மேஜர்ஜெனரல் கருத்து

(கொழும்பு)
''பெரியதொரு தாக்குதலுக்கு தமிழ்த் தீவிரவாதிகள் தயாராகிவருகின்றனர். பாதுகாப்புப்படையினருடன் அப்படி ஒரு மோதல் ஏற்படுமானால், தமிழர்கள் அநியாயமாகச் சாகவேண்டி ஏற்படும். ஆகையினால் தமிழ்மக்கள் தங்களது நிலைப்பாட்டை கவனத்தில்கொள்ளவேண்டும்'' என்று பாதுகாப்புப்படைகளின் ஒருங்கிணைந்த சேவைகள் பிரிவின் தளபதி மேஜர் ஜெனரல் எஸ்.சி.ரணதுங்கா கோரிக்கை

(5ம் பக்கம் பார்க்க)

## பெந்தோட்டையில் தமிழீழவாதிகள் கூட்டம்

### பாராளுமன்றத்தில் பிரஸ்தாபம்

(கொழும்பு)
''பெந்தோட்டைப் பகுதியிலுள்ள 'றுபின்சன்' கிளப்பில், தமிழ்ஈழவாதிகள் கூட்டங்களை நடத்தியுள்ளனர். இவர்கள் கூட்டங்களை நடத்தியதற்கான ஆதாரங்கள் பொலிஸ் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது''.

இவ்வாறு மஹரகம எம்.பி. திரு. தினேஷ் குணவர்த்தன நேற்றுப் பாராளுமன்றத்தில் பேசுகையில் தெரிவித்தார்.

பொது நிர்வாக பெருந்தோட்ட அலுவல்கள் அமைச்சின் நிதி ஒதுக்கீட்டு குழுநிலை விவாதத்தில் கலந்துகொண்டு பேசுகையில் அவர் இவ்வாறு தெரிவித்தார்.

''தனிச்சிங்களச் சட்டத்தி

(5:ம் பக்கம் பார்க்க

## நடைபவனியாகவும் பஸ்களிலும் ரோந்து!

(யாழ்ப்பாணம்)
நாவற்குழி இராணுவ முகாமிலிருந்து ஆயுதப்படையினர் கடந்த சில நாட்களாக குறிப்பிட்ட தூரம்வரை நடையாகவும்,மினிபஸ்களிலும் பிரயாணிகளுடனும் ரோந்து சுற்றத் தொடங்கியுள்ளனர்.

நேற்றுமுன்தினம் மாலை முகாமிலிருந்து நாவற்குழிச் சந்திவரை பிரயாணிகளுடனை மிஸ் பஸ்ஸில் வந்திறங்கிய ஆயுதப்படையினர், பரவலாகத் துப்பாக்கிப்பிரயோகம் செய்ததாகவும், இதனால் சிலர் காயமடைந்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது.

துப்பாக்கி வெடிச் சத்தங்கள் கேட்டதைத் தொடர்ந்து

(5-ம் பக்கம் பார்க்க)

## ராஜீவ் ஜே. ஆர். 7-ல் சந்திப்பு

(புதுடில்லி)
ஜனதிபதி ஜே.ஆர். ஜெயவர்த்தனவும், இந்தியப்பிரதமர் திரு. ராஜீவ் காந்தியும் நாளை மறுதினம் பங்களாதேஷ் தலைநகர் டாக்காவில் சந்திப்பார்கள்.

## மூவர் கடத்தப்பட்டனர்

(யாழ்ப்பாணம்)
யாழ். ஆஸ்பத்திரி வீதியில் நடமாடிய இருவர் நேற்று இனந்தெரியாத நபர்களால் கடத்திச் செல்லப்பட்டுள்ளனர்.

நேற்று முன்தினம் யாழ். புகையிரத நிலையத்தில் வைத்து ஒரு நபர் கடத்திச் செல்லப்பட்டுள்ளார். (மா)

## 40உதவி பொலிஸ்அதிபர்கள் 02தமிழர்; 02 முஸ்லிம்கள்

[கொழும்பு]
உதவிப் பொலிஸ் அதிபர்களாகப் பதவி உயர்த்தப்பட்ட 40 பொலிஸ் இன்ஸ்பெக்டர்களில் இரு தமிழர்களும், இரு முஸ்லிம்களும், இரு மலாயர்களும், 34 சிங்களவர்களும் உள்ளனர்.

மட்டக்களப்பு - ஏறுவூர் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி திரு. ஏ. தியோபலஸ், குற்றப்பிரிவு, புலனாய்வுப்பிரிவு பொறுப்பதிகாரி திரு. வி. நமசிவாயம், யாழ். பொலிஸ் நிலையத் தலைமைக் காரியாலய பொறுப்பதிகாரி ஜனுப் அஸ்வர் சமால்டீன், அமைச்சர் ஒருவரின் பாதுகாப்பு அதிகாரி ஜனுப் வஹாப்தீன் ஆகியோர் உதவிப் பொலிஸ்அதிபர்களாக நியமிக்கப்பட்ட தமிழ், முஸ்லிம்களாவர். (மா)

## நச்சுவாயு கசிவு: நாசவேலை இல்லை!

(கொழும்பு)
யூரியா (உரத்) தொழிற்சாலையில் ஏற்பட்ட நச்சுவாயுக் கசிவுக்கு நாசவேலை காரணம் அல்ல என்று உர உற்பத்திக் கூட்டுத்தாபனத்தின் தலைவர் திரு. அசோகா சேனநாயகா கூறியுள்ளார்.

இந்த நச்சுத் தன்மைக்கு கூட்டுத்தாபன வளவிலிருந்த குளோரின் சிலிண்டரில் ஏற்பட்ட உடைப்பே காரணம் என்று கூறிய அவர்; இந்த உடைப்பின் மூலம் சுமார் 900 கிலோ கிறும் 'குளோரின்' வெளியேறியுள்ளதாகவும் கூறினர்.

பாதிப்படைந்தவர்களுக்கு விரைவில் நஷ்டஈடு வழங்கப்படுமென்றும் திரு. சேனநாயகா கூறினர்.

## 400 ஆசிரியர்களுக்கு நியமனம் வழங்க முடிவு

(கொழும்பு)
க.பொ.த. (உயர்தர) தகைமையுடைய 400 ஆசிரியர்கள் நியமிக்கப்படவுள்ளனர்.

க, பொ, த, (சாதாரணம்) பரீட்சையில் சித்தியடைந்தோரை தராதரப் பத்திர மற்ற ஆசிரியர்களாகவும், உயர்தரத்தில் சித்தியடைந்த 400 பேரை தராதரப் பத்திரமுடைய ஆசிரியர்களாகவும் சேர்த்துக் கொள்வதென கல்வி அமைச்சர் திரு. ரணில் விக்கிரமசிங்க அமைச்சரவையில் சமர்ப்பித்த பிரேரணை ஏற்றுக் கொள்ளப்பட்டதைத் தொடர்ந்தே இத்தீர்மானம் இடம் பெறவுள்ளது.

நியமிக்கப்படுவோர் இளைஞர் சமூக நடவடிக்கையில் அனுபவம் உள்ளவராகவும், மாணவர் தலைமைத்திறமையுடையவர்களாகவும் இருத்தல் அவசியமெனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (பி)

# விளம்பரம்

## தேவை

யாழ்ப்பாணத்தில் பிரபலமான சுபாஸ் பேக் ஹவுசுக்கு பாண், பணிஸ், கேக் தயாரிப்பதில் அனுபவமுள்ள ஒரு ஆள் உடனடியாகத் தேவை நற்சான்றிதழுடன் நேரில் தொடர்புகொள்ளவும்: சுபாஸ் பேக் ஹவுஸ், 176 ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். (2128)

---

மெசினில் தென்னந் தும்பு அடிக்க அனுபவமானவர்கள் ஆண்கள் தேவை. ஒப்பந்த அடிப்படையில் வேலைகள் கொடுக்கப்படும். தொடர்பு:- வி. சோமசுந்தரம், 68 ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். 2126

---

மருதடி விநாயகர் ஆலயத்திற்கு S. K. W. மேற்பட்ட ஜெனறேற்றர் (டீசல்) யந்திரம் தேவை. தொடர்புகொள்ளவும்: விமாகி: 27/3, மின்சாரநிலைய வீதி, யாழ்ப்பாணம். போன்: 24043 (2130)

---

தினசரி காலை, மாலை பூசைகளும் விசேச தினங்களில் விசேச பூசைகள் முதலியன நடைபெறும் ஆலயத்திற்கு பூசகர் தேவை. தயவுசெய்து விபரங்களுடன், எதிர்பார்க்கும் மாதப்படியுடன் (Allowance) 20-12-85க்கு முன்பாகக் கீழ்க்காணும் முகவர்க்கு விண்ணப்பிக்கவும். செயலாளர், ஸ்ரீ சாயி துர்க்காதேவி ஆலயம், கொக்குவில். (2137)

---

அச்சகத்தில் பைண்டர்களாக பணிபுரிவதற்கு, வேலை பழகுவதற்கு அனுபவமுள்ள, ஆர்வமுள்ள இரு பெண் பிள்ளைகள் தேவை. நேரில் வரவும். ஈகிள் பிறின்டிங் வேக்ஸ் லிமிட்டெட், 161, சிவன்பண்ணை வீதி, கொட்டடி, யாழ்ப்பாணம். (2143)

---

எமது தொழிற்சாலைக்கு அனுபவம் வாய்ந்த 40 வயதுக்குட்பட்ட Welder / Tinker உடனடியாக தேவை. தகுதிக்கேற்ப ஊதியம் வழங்கப்படும். விண்ணப்பங்கள் அனுப்பவேண்டிய முகவரி: லீலா எந்திரவியல் தொழிற்சாலை, 147, கே. கே. எஸ். வீதி, மாவிட்டபுரம், தெல்லிப்பழை. (2160)

---

இறைச்சிக்கு கோழி தேவை. இனங்களுக்கு ஏற்றபடி கிலோ 30/- முதல் 35/- வரை கொள்முதல் செய்யப்படும். விபரங்களுக்கு தொடர்பு: ஹோட்டல் பரடைஸ், 91, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். (2157)

## வகுப்புகள்

பிற்மன் லண்டன் பரீட்சை தோற்றும் மாணவர்களே: 90 Hours Course. Pitman Typing-Shorthand, Bock-Keeping. விண்ணப்ப முடிவு திகதி: 23-12-85. இத்துரிதப் பயிற்சிகளுக்கு தொடர்பு.- யாழ் நகரில்: நிர்வாகி சங்கர், "J. E. C." சாந்தி சினிமா முன் மேல்மாடி, யாழ்ப்பாணம். கிளை: பிறிலியன் அக்கடமி, (i) பிரதான வீதி. பருத்தித்துறை. (ii) மகாத்மா வீதி, நெல்லியடி. (2120)

---

கலர் பிலிம் சுருள்களை PROCESSING + PRINTING செய்வதற்கு கொழும்பு ஸ்ருடியோ

## விற்பனைக்கு

நாவற்குழி - மறவன்புலோ றோட்டில் கோயிலாக்கண்டியில் றோட்டு ஓரமாக முப்பத்திநாலு (34) பரப்பு அறுதி நெற்காணி நெல்லுடன் விற்பனைக்குண்டு. பிரச்னையற்ற தெளிவான உறுதி தொடர்பு கொள்க; டாக்டர் S. சின்னத்துரை, சிவன் வீதி, உரும்பிராய் கிழக்கு, உரும்பிராய். 2104

---

சுத்தமான ஜேமன் அல்ஸேசன் ஏழு கிழமை, பூச்சி அகற்றப்பட்ட குட்டிகள் உண்டு. Book பண்ணினவர் உடன் எடுக்கவும். சேவியர், 249, பலாலி வீதி, சுந்தர் மடம். (2133)

---

பிறவுண் வீதி 1-ம் ஒழுங்கையில் வீடு வளவு விற்பனைக்குண்டு. தொடர்பு: விளம்பர இல. 2151, C/o ஈழநாடு, யாழ்ப்பாணம். (2151)

## தவறிவிட்டது

இ.க. ஆறுமுகசாமி, இடைக்காடு, அச்சுவேலி என்பவரின் சாரதி லைசென்ஸ் இல. 012117,84/6978, மோட்டார் சைக்கிள் இன்சூரன்ஸ், ரக்ஸ், அடையாள அட்டை இல. 50228341 Vயும், தங்கமணி கந்தையாவின் இடைக்காடு அடையாள அட்டையும் தவறிவிட்டது. கண்டெடுப்பவர்கள் மேற்கூறிய விலாசத்திற்கு அனுப்பிவைக்க வைக்கவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். (2155)

---

எனது தேசிய அடையாள அட்டை இல. 562331409X, இலங்கை சி.கூ. தாபனத்தால் வழங்கப்பட்ட அடையாள அட்டை, லங்கா சீமெந்து நிறுவனத்தால் வழங்கப்பட்ட அடையாள அட்டை உள்ளடங்கிய சிவப்பு நிற மணிபேஸ் கட்டுவன் சந்திக்கும் புன்னாலைக்கட்டுவன் சந்திக்குமிடையில் தவறிவிட்டது. கண்டு எடுத்தவர்கள் தற்போதைய அவல நிலையை மனதில் கொண்டு கீழ்காணும் முகவரியில் ஒப்படைக்கவும். தகுந்த சன்மானம் கொடுக்கப்படும். கே. எஸ். குணசிங்கம், விநியோகப்பகுதி, லங்கா சீமெந்து லிமிட்டெட், காங்கேசன்துறை. (2163

---

### யாழ்ப்பாணம் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் (வரைவுள்ளது)

### ஏல விற்பனை

யாழ்ப்பாணம் பிரதான வீதியில் அமைந்துள்ள எமது கூட்டுறவு அச்சகத்தில் கீழ்க் குறிப்பிட்ட இயந்திரங்கள் 14-12-85 சனிக்கிழமை காலை 10-00 மணி தொடக்கம் பிற்பகல் 12-00 மணி வரை ஏலத்தில் விற்கப்படும்.

1. கான் பீடிங் சிலின்ரர் மெசின் சிங்கிள் டிமை. (Hand FeedingCylinder Machine, Single Demi)
2. காகித உறை வெட்டும் இயந்திரம். (Envelope Cutting Machine)

பதில் பொதுமுகாமையாளர்
127, கே. கே. எஸ். வீதி,
யாழ்ப்பாணம்,
02-12-85. (2147)

---

### யாழ்ப்பாணம் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் (வரைவுள்ளது)

### கேள்வி விண்ணப்பம்

யாழ்ப்பாணம் பிரதான வீதியில் அமைந்துள்ள எமது கூட்டுறவு அச்சகத்தில் ஒறிஜினல் ஹைடில்பேக் ஓட்டமெற்றிக் பிளான்ரின் மெசின் சேவிஸ் செய்வதற்கு கேள்வி மூலம் விண்ணப்பங்கள்கோரப் படுகின்றன. நேரில் பார்வையிட்டு விண்ணப்பிக்கலாம். விண்ணப்ப முடிவுத் திகதி: 16-12-85.

பதில்
பொதுமுகாமையாளர்.
127, கே. கே. எஸ். வீதி,
யாழ்ப்பாணம்,
02-12-85. (2149)

---

### Laboratory Trainee

Applications are invited for training in clinical laboratory work.

Minimum Qualifications:-

G. C. E. (A/L) Bio Science three passes including Chemistry. Preferable Credit Pass in English G.C.E. (O/L).

For further particulars contact the Acting Medical Superintendent, Green Memorial Hospital, Manipay.

Closing Date:-
30th December, 1985.

Actg. MEDICAL SUPERINTENDENT,
Green Memorial Hospital,
Manipay.
(2164)

---

### யாழ்ப்பாண மாநகராட்சி மன்றம் மலசலகூட கதவுகள் செய்துபொருத்துவதற்கான கூறுவிலை

### அறிவித்தல்

பின்வரும் கதவுகளைச்செய்து பொருத்துவதற்கான அரக்கு முத்திரையிடப்பட்ட கூறுவிலைகள் யாழ்ப்பாண மாநகராட்சி மன்ற ஆணையாளரால் 1985ம் ஆண்டு டிசம்பர் மாதம் 12ம் திகதி வியாழக்கிழமை நண்பகல் 12-00 மணி வரை ஏற்றுக் கொள்ளப்படும்.

1. 2'-6'' 6'-0'' அளவுள்ள மலசலகூடக் கதவுகள் — 10
2. 3'-6'' 6'-8'' அளவுள்ள மலசலகூடக் கதவுகள் — 03

யாழ்ப்பாண மாநகராட்சி மன்ற மராமத்துப் பொறியியலாளரிடமிருந்து 1985-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 11ம் திகதி புதன்கிழமை நண்பகல் 12-00 மணி வரை ரூபா 10/- (பத்து) செலுத்துவதன் பேரில் பெற்றுக்கொள்ளக்கூடிய படிவங்களின் இணைப்பிரதிகளில் கூறுவிலைகள் குறிப்பிடப்பட்டு "மாநகர ஆணையாளர், மாநகராட்சி மன்ற அலுவலகம், யாழ்ப்பாணம்" என விலாசமிடப்பட்டு அனுப்பப்படல் வேண்டும். கூறுவிலையைத் தாங்கிவரும் உறையின் இடது பக்க மேல் மூலையில் கூறுவிலையின் விபரம் குறிப்பிடப்படல் வேண்டும்.

இதர விபரங்களை யாழ். மாநகராட்சி மன்ற மராமத்துப் பொறியியலாளரிடம் இருந்து அலுவலக நேரத்தில் அறிந்துகொள்ளலாம்.

சி.வீ.கே. சிவஞானம்,
மாநகர ஆணையாளர்,
யாழ்ப்பாணம்.
மாநகராட்சி மன்ற
அலுவலகம்,
யாழ்ப்பாணம்.
28-11-1985. (2145)

---

### யாழ்ப்பாணம் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் (வரைவுள்ளது)

யாழ். ப. நோ. கூ. சங்கத்தின் பிரதான வீதியில் அமைந்துள்ள ரவுண் சொப் கிளையில் தளபாட உபகரணங்கள்.

### ஏல விற்பனை

இடம்:- பிரதான வீதி
காலம்:- 15-12-85
நேரம்:- காலை 9-00 மணி தொடக்கம் பிற்பகல் 3-00 மணி வரை.

பொருட்கள்: பிடவைக் கடை காட்சிப்படுத்தும்தேக்கு மரத்திலை ஆன கண்ணடி அலுமாரிகள்.

கந்தோர் பாவிப்புக்கான முதிரை மேசைகள், கதிரைகள், முக்காலிகள், கடைகளுக்குத்தேவையான விறுக்கிகள், பட்டடைகள் ஆகிய நல்ல நிலையிலுள்ளவை விற்பனைசெய்யப்படும்.

பதில்
பொதுமுகாமையாளர்.
127, கே. கே. எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.
03-12-85. (2148)

---

### அறிவித்தல்

[1] தென்மராட்சி கிழக்கு பலநோக்குக்கூட்டுறவுச் சங்கத்தில் [கொடிகாமம்] 5000க்கு மேலான வெற்றுச்சாக்குகளும், 45 கலன் கொள்ளக்கூடிய வெற்றுப் பரல்களும் [50] கேள்விப்பத்திர மூலம் விற்பனைக்கு இருக்கிறது. ரூபா 150/- முறபணம் கட்டி கேள்விப் பத்திரங்களைச் சங்க அலுவலகத்தில் பெற்றுக்கொள்ள வேண்டும். 20-12-85ந் திகதி வெள்ளிக்கிழமை நண்பகல் 12-00 மணி வரை பூரணப்படுத்தப்பட்ட கேள்விப் பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படும். பொருட்களைச் சங்கத்தில்பார்வையிடலாம்.

[2] தென்மராட்சி கிழக்கு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம், கொடிகாமம் தனது 1986ம் ஆண்டிற்கான பொதிகள் ஏற்றுவதற்கான லொறி சேவை ரெண்டர் மூலம் கோரப்படுகின்றது. விண்ணப்பப்பத்திரம் பிரதம சங்கத்தில் பெற்று பூர்த்தி செய்து 20-12-85ந் திகதிக்கு முன்பு பொதுமுகாமையாளரிடம் சேரல் வேண்டும். தெரிவு செய்யப்படுபவர் பிணை ரூபா 1500/- செலுத்தி சங்கத்துடன் ஒப்பந்தம் செய்தல் வேண்டும்.

பொது முகாமையாளர்
[2161]

---

### விலைமாற்ற அறிவித்தல்

2-12-1985 தொடக்கம் சீ.பி.இ. மின்சார பல்ப் வகைககளின் புதிய விலைகள்:

| | | |
|---|---|---|
| 25 Watt | - | 9-60 |
| 40 '' | - | 9-50 |
| 60 '' | - | 9-60 |
| 75 '' | - | 9-80 |
| 100 '' | - | 10-00 |

வடமாகாண ஏகவிநியோகஸ்தர்கள்

### நியூரோன் எலக்ரிக்கல்ஸ்

141, 143, ஸ்ரான்லிவீதி:
யாழ்ப்பாணம்.
2-12-85.
(2162)

---

### பின்னுறுதிக்கட்டளை பற்றிய அறிவித்தல்

யாழ்ப்பாணம் மாவட்ட நீதிமன்றத்தில்

மானிப்பாயைச் சேர்ந்த காலஞ்சென்ற சரவணை குமாரசாமியால் விட்டிறந்த மரணசாதனம் எழுதப்படாத சொத்துக்களுக்கு நிர்வாகத் தத்துவம் பெறும் விடயமாக.

மரணமெய்தியவர்.

மரணச்சொத்துரிமை
நியாயாதிக்கம் இல: 3919

மானிப்பாய் வடக்கு, சரவணை குணரத்தினம்.

மனுதாரர்.

மேலேயுள்ள இலக்கங் கொண்ட மரணசாதனமில்லாத தத்துவ வழக்கு மேலே குறிக்கப்பட்ட இறந்துபோனவரின் ஆதனங்கள் மற்றும் சொத்துக்கள் ஆகியவற்றை நிர்வகிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் கொடுக்கப்பட்டு அதில் அதற்கிணங்கப் பின்னுறுதிக் கட்டளை பதியப் பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

அக்கறையுள்ள எவரேனும் 1985ம் ஆண்டு மார்கழி மாதம் 20-ம் திகதி முற்பகல் 9-00 மணிக்கு இம்மன்றத்தின் முன்னர் தோன்றி அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக்கட்டளை ஏன் முற்றுனதாக்கப்படலாகாது என்பதற்குக் காரணம் காட்டுமாறு இத்தால் தேவைப்படுத்தப்படுகின்றார்.

நீதிமன்ற ஆணைப்படி,
கு. குலசிங்கம்,
பதிவாளர்.

1985ம் ஆண்டு புரட்டாதி மாதம் 30-ந் திகதி.
வரைந்தவர்:
சி. இராசேந்திரன்,
மனுதாரின் சட்டத்தரணி.
(2134)

---

### 1-வது பிறந்தநாள் வாழ்த்து

### செல்வி லாவண்யா தனேந்திரன்



யாழ்ப்பாணம் கொட்டடி சீனி வாசகம் வீதியைச் சேர்ந்த திரு. நா. தனேந்திரன் நீலாதேவி தம்பதிகளின் செல்வப்புதல்வி லாவண்யா தனது முதலாவது பிறந்த தினத்தை (இன்று) 5-12-85 வியாழக்கிழமை அவரது 32/5, இலக்க இல்லத்தில் மிக அமைதியாகக்கொண்டாடுகிறுர். குழந்தையை அப்பா, அம்மா, அம்மம்மா, தாத்தா, அப்பம்மா, மாமா, அத்தை, பெரியப்பாமார், பெரியம்மாமார், சித்தப்பாமார், அன்ரிமார், அண்ணன்மார், அக்காமார் சகல செல்வங்களும் பெற்று நீடூழிகாலம் வாழ வாழ்த்துகின்றனர். (2156)

### அரசின் தடையையும் மீறி:

# தென்னுபிரிக்க பொதுக் கூட்டத்தில் வின்னிமண்டேலா பேச்சு

(பிரிட்டோரியா)

தென்னுபிரிக்காவில் சிறைவைக்கப்பட்டிருக்கும் தேசியத் தலைவர் திரு. நெல்சன் மண்டேலாவின் துணைவியார் திருமதி வின்னி மண்டேலா தென்னுபிரிக்க அரசின் தடையையும் மீறி பிரிட்டோறியாவுக்கு அருகே பொதுக்கூட்டம் ஒன்றில் உரையாற்றியுள்ளார்.

தென்னுபிரிக்க அரசின் கொடுமைகளினுல் கொல்லப்பட்ட பல கறுப்பின மக்களின் நினைவாக ஒழுங்குசெய்யப்பட்டிருந்த பொதுக்கூட்டம் ஒன்றிலேயே அவர் தடையையும் மீறி உரையாற்றியுள்ளார்.

இக்கூட்டத்தில் திருமதி வின்னி மண்டேலா உரையாற்றுகையில் ''ஆபிரிக்க மக்கள் மீது மேற்கொள்ளப்படும் இரத்தக்களரிக்கு பழிவாங்கப்படும். நாம் விடுதலைபெறும் நாள் அதிக தூரத்தில் இல்லை. எம்மீது மேற்கொள்ளப்படும் கொடுமைகளுக்கு விரைவில் முற்றுப்புள்ளி வைக்கப்படும்'' என்று கூறினுர்.

## 3, 500 ஆசிரியர் கைது

(சென்னை)

தமிழ் நாட்டில், பல்வேறு மாவட்டங்களிலும் நேற்றிரவு சுமார் மூவாயிரத்து ஐ நூறு ஆசிரிய ஆசிரியைகள் கைதானுர்கள்.

ஆசிரியர்களின் பத்து அம்சக் கோரிக்கைகளை வலியுறுத்த சென்னையிலும், தமிழகத்தின் பிற மானிலங்களிலும் மறியல் செய்யமுயன்ற ஆசிரியர்களே கைதானவர்களாவர். (பி)

### அகதிகள்

# குடியேற்றத்திட்டத்தில் ஆஸ்பத்திரி!

### அளவெட்டி ஆச்சிரமம் நடவடிக்கை

[கிளிநொச்சி நிருபர் கே.வி.கே. திருலோகமூர்த்தி]

கிளிநொச்சி ஜெயபுர அகதிகள் குடியேற்றத் திட்டத்தில் ஆஸ்பத்திரி ஒன்றை நிறுவிக் கொடுக்க அளவெட்டி சுப்பிரமுனிய சுவாமிகள் ஆச்சிரமத்தில் துரித நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளனர் என்று உருத்திரபுரம் காந்தி சேவா சங்க நிர்வாகியும், கிளிநொச்சி மாவட்ட சர்வோதய அமைப்பாளருமான எஸ். கே. வேலாயுதபிள்ளை தெரிவித்தார்.

''கடந்த 1983ம் ஆண்டு ஜூலைக் கலவரத்தால் பாதிக்கப்பட்டு கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள தும்புறுவில் பிரதேசத்தின் ஜெயபுரத்தில் அரசால் குடியேற்றப்பட்ட ஆயிரத்திற்கு மேற்பட்ட மக்களின் வைத்திய வசதிகளைமுன்னிட்டு சுமார் ஒன்றரை லட்ச ரூபா செலவில் இந்த ஆஸ்பத்திரி அமைக்கப்படவுள்ளது. காந்தி சேவா சங்கமும், சர்வோதய இயக்கமும் இணைந்து சுமார் 300க்கு மேற்பட்ட அகதிக் குடும்பங்களை ஜெயபுரத்தில் குடியேற்ற நடடிக்கை எடுத்துள்ளன. எமது முயற்சிகளுக்கு அரசாங்க அதிபர் திரு. ஜெயநாதனும், மாவட்ட காணி அதிகாரி திரு. பத்மநாதன், சர்வோதய வடடகுதி அமைப்பாளர் திரு. கதிரமலை ஆகியோர் பெரிதும் உறுதுணையாக இருந்து வருகின்றனர்'' என்றும் திரு. வேலாயுதபிள்ளை தெரிவித்தார்.

சர்வோதய இயக்கம் இக்குடியேற்றத் திட்டத்தில் பாடசாலையொன்றை நிறுவவும், சங்கக்கடை அமைக்கவும் நடவடிக்கைகள் எடுத்துள்ளது. இங்கு குடியேற்றப்பட்ட மக்களின் வசதிகளை முன்னிட்டு வைத்திய அதிகாரி ஒருவரையும் ஜெயபுரத்தில் சேவையாற்ற நடவடிக்கை மேற்கொண்டுள்ளது என்றும் திரு. வேலாயுதபிள்ளை குறிப்பிட்டார்.

## ''நமீபியாவின் சுதந்திரத்துக்கு உலக சமுதாயம் உதவவேண்டும்''

### ஸிம்பாப்வே பிரதமர் கோரிக்கை

[சோல்பரி]

அடக்குமுறைக்குள் அகப்பட்டிருக்கும். நமீபியாவின் சுதந்திரத்துக்காக ஸிம்பாப்வே அரசு செயல்முறையான நடவடிக்கைகளை மேற்கொள்ளும் என்றும் ஸிம்பாப்வேயின்பிரதமர் றுபேர்ட் முகாபே கூறியுள்ளார்.

நமீபியாவின் சுதந்திரம் தொடர்பாக அவர் நேற்றுக் கருத்து வெளியிடுகையில் இவ்வாறு தெரிவித்தார்.

நமீபியாவின் சுதந்திரத்துக்குத் தடையாக இருக்கும் நாடுகளைக் கண்டித்து அந்த நாட்டின் சுதந்திரத்துக்கு வழிவகுக்கும்படி அவர் உலக சமுதாயத்தைக் கேட்டுக்கொண்டுள்ளார்.

# அடுத்தாண்டு சமாதான ஆண்டு இ. தொ. காங்கிரஸ் தீர்மானம்

[கொழும்பு]

1986ம் ஆண்டை சமாதான ஆண்டாக பிரகடனம் செய்வதென்று, இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் தீர்மானித்துள்ளது.

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் தேசிய கவுன்சில் கூட்டம் நேற்றுக் காலை கிராமியக் கைத்தொழில் அமைச்சர் திரு. எஸ். தொண்டமான் தலைமையில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில்; ஜனவரி மாதம் 14ம் திகதி தொடக்கம் ஏப்ரல் மாதம் 15ம் திகதி வரை அதாவது, தைப்பொங்கல் தொடக்கம் தமிழ் சிங்களப் புத்தாண்டு வரையுள்ள மூன்று மாத காலத்திலும் 'நாட்டில் அமைதி நிலவ வேண்டும், இனப்பிரச்னை தீரவேண்டும்' என்று காலை, மாலை வேளைகளில் பிரார்த்தனைகளில் ஈடுபடுவது என்று தீர்மானிக்கப்பட்டது.

மேற்படி கூட்டத்தில், வடக்குக் கிழக்குப் பகுதிகளில் பாதுகாப்புப் படையினர் பொது மக்கள் மீது மேற்கொள்ளும் தாக்குதல்கள் தோட்டப் பகுதிகட்கும் பரவலாம் என்று அச்சம் தெரிவிக்கப்பட்டது. [பி]

## இடதுசாரி கூட்டத்துக்கு அனுமதி மறுப்பு

(பொரளை)

இடதுசாரிகளின் கூட்டமொன்றுக்கு பொலிஸார் அனுமதி வழங்க மறுத்துவிட்டனர்.

லங்கா சசமமாஜகட்சி, கம்யூனிஸ்ட்கட்சி, மக்கள்கட்சி ஆகியவை ஒருங்கிணைந்து நேற்று பொரளையில் நடத்தவிருந்த கூட்டத்துக்கே பொலிஸ் அனுமதி கிடைக்கவில்லை.

பாதுகாப்பு, வீதிப் போக்குவரத்து ஆகியவை காரணம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

## கலிபோர்ணியா போர்தவிர்ப்புப்பரிசு---

# ராஜீவ் உட்பட 6 உலகத் தலைவர்கள் பெற்றனர்

(கலிபோர்ணியா)

கலிபோர்ணியாவின் 'வியன்வார்'போர் தவிர்ப்பு பரிசு ஐந்து கண்டங்களைச் சேர்ந்த ஆறு உலக தலைவர்களுக்கு கிடைத்துள்ளது.

இந்தியப் பிரதமர் திரு, ராஜீவ் காந்தி மற்றும் மெக்சிக்கோ, அர்ஜன்டீனு, சுவீடன், கிறீஸ், தன்சானியா ஆசிய நாடுகளின் தலைவர்களுக்கு இந்தப் பரிசு வழங்கப்பட்டுள்ளது.

இந்த பரிசில் 10,000 டொலர் ரொக்கப்பணமும் ஒரு பரிசு படிவமும் அடங்கிறது.

## சிறுமிக்கு சூடு விழுந்தது

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு பொலிஸ் நிலையத்திலிருந்து வெளியான துப்பாக்கி வேட்டுக்கள் ஒரு வீட்டின் சமயலறையில் சாப்பிட்டுக்கொண்டிருந்த 13வயது சிறுமியின் தொடையைப் பதம் பார்த்து விட்டதாம்!

நேற்று முன்தினம் இரவு 8-30 மணியளவில் இச்சம்பவம் இடம்பெற்றது.

மஞ்சுளா அமிர்தலிங்கம் என்னும் சிறுமிக்கே படுகாயம் ஏற்பட்டது.

இவர் அரசடி மகாவித்தியாலயத்தில் 7ம் வகுப்பு படிக்கிறுர். இப்பொழுது சிகிச்சைக்காக மட்டக்களப்பு ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (ய- மா)

## ஏழுபேர் பலியானுர்களாம்

(சென்னை)

மட்டக்களப்பில், அரசடி சந்தியில் பொலிஸ் கொமாண்டோக்கள் நேற்று முன்தினம் துப்பாக்கிப்பிரயோகம் செய்ததில் தமிழ் ஈழ விடுதலைப் புலிகள் இயக்கத்தைச் சேர்ந்த போராளி ஒருவர் உட்பட, ஏழு தமிழர்கள் கொல்லப்பட்டதாக சென்னையில் தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பு நேற்று வெளியிட்ட செய்திக்குறிப்பு தெரிவித்துள்ளது. (பி)

### ஹொக்கிப் போட்டி:

## இந்தியா வெற்றி

(கோலாலம்பூர்)

மலேசயாவின் ஈபோவில் நடைபெறும் சுல்தான் அஸ்லாந்ஷா ஹொக்கிப் போட்டியில் இந்தியா வெற்றி பெற்று சாம்பியனுகியது,

நேற்று முன்தினம் நடைபெற்ற இறுதி ஆட்டத்தில் இந்தியா மலேசியாவை 4—2 கோல்கணக்கில் வெற்றி பெற்றது.

## பற் சுகாதார வாரம்

(சுண்டுக்குளி)

வட்டுக்கோட்டை லயன்ஸ் கழகத்தினர் நேற்று முன்தினம் முதல் 8ம் திகதி வரை அனுஷ்டிக்கும் தேசிய சிறுவர் பற் சுகாதார வாரத்தை முன்னிட்டு பாலர் பாடசாலைப் பிள்ளைகளுக்குப் பற்களைப் பாதுகாப்பதும், பல் தூரிகையால் முறைப்படி துலக்குவது குறித்து விசேட விளக்கத்தை அளித்துவருகின்றனர் செய்கை முறையை டல் வைத்திய நிபுணர் திரு. எஸ். யோகநாதன் இச் சேவையை நடத்துகிறுர்.

லயன் வலயத் தலைவரும், சுகாதாரக் குழுத் தலைவருமான லயன் டாக்டர் ரி. பகீரதனும், வட்டுக்கோட்டை லயன்ஸ் கழகத்தலைவர் திரு. டபிள்யூ. என். தேவகடாட்சமும் இதற்கான ஒழுங்குகளை செய்துள்ளனர். இதன்படி இம்மாதம் 7ம் திகதி சனிக்கிழமை காலை நவாலி வை. எம். சி. ஏ. மண்டபத்தில் அப்பகுதியில் உள்ள பாலர் பாடசாலை மாணவருக்கு இலவசமாக மேற்படி செய்கை முறை விளக்கப்படும். பாடசாலைப் பிள்ளைகளை அவர்களின் ஆசிரியருடன் தாய்மாரைக் கூட்டிக்கொண்டு வருமாறு அமைப்பாளர்கள் அழைத்துள்ளனர்.

## நேர்முகப் பரீட்சை

(யாழ்ப்பாணம்)

பலாலி ஆசிரிய கலாசாலையில் 86 - 87 ஆண்டுக் காலத்தில் பயிற்சி பெறுவதற்கு ஆசிரியர்களைத் தெரிவு செய்தற்கான நேர்முகப் பரீட்சை பலாலி ஆசிரிய கலாசாலையில் இம் மாதம் 11, 12, 13 ம் திக்திகளில் நடைபெறவுள்ளது.

இது தொடர்பான கடிதங்கள் அனுப்பட்டுள்ளவர்களில் இந் நேர்முகப்பரீட்சை மூலம் கணிதம், விஞ்ஞானம், விவசாயம் ஆகிய மூன்று நெறிகளில் பயிற்சி பெற ஆசியர்கள் தெரிவு செய்யப்படவுள்ளனர்.

## ''வவனியா அகதிகள்

# அரச உதவிகளை நிறுத்தவேண்டாம்! ஜனுதிபதிக்கு பிரஜைகள்குழு கோரிக்கை''

(புலோலி)

''அண்மையில் வவனியாவில் இடம்பெற்ற வன்செயல்களினுல் பாதிப்படைந்து, சொத்துக்களையும் இழந்து அகதிகளாக்கப்பட்ட தமிழ் மக்களுக்கு வழங்கிவந்த அகதிகளுக்கான உதவிகளை நிறுத்த வேண்டாம். தற்போது வவனியாவுக்குத் திரும்பிவர முடியாமல் இருக்கும் இத்தமிழ் அகதிகள் வவனியாவுக்குத் திரும்பக்கூடிய நிலை ஏற்படும் வரை அகதிகளுக்கான உதவிகளை அரசாங்கம் வழங்க நடவடிக்கை எடுக்கவேண்டும்.''

மேற்கண்டவாறு பருத்தித்துறை பிரஜைகள் குழு ஜனுதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தனுவைக் கேட்டுள்ளது.

இதுசம்பந்தமாகப் பருத்தித்துறை பிரஜைகள் குழு ஜனுதிபதிக்கு அனுப்பிவைத்துள்ள மகஜரில் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது:-

''அண்மையில் வவனியாவில் இடம்பெற்ற வன்செயல்களால் அங்கு வாழ்ந்துவந்த தமிழ் மக்களின் பல கோடி ரூபா பெறுமதியான உடைமைகள் கொள்ளையடிக்கப்பட்டுள்ளதுடன், தீக்கிரையாக்கப்பட்டதும், அவர்கள் அகதிகளாக்கப்பட்டு வேறு மாவட்டங்களில் தஞ்சமடைந்ததும் யாவரும் அறிந்த உண்மை. இந் நிலையில் வேறு மாவட்டங்களில் தஞ்சமடைந்துள்ளஅகதிகளை வவனியாவுக்கு அழைப்பதும், வவனியாவுக்கு வரமுடியாதவர்களுக்கு அகதிகளுக்கு வழங்கப்படும் உதவிகள் நிறுத்தப்படுமென்று அறிவிக்கப்பட்டுள்ளதும் பெரும் ஆச்சரியத்திற்குரியதாகும்.

வவனியாவில் சகஜ நிலை தோன்றி மக்கள் வவனியாவுக்குத் திரும்பக்கூடிய நிலை ஏற்படும்வரை இந்த அகதிகளுக்கான உதவிகளை அரசாங்கம் வழங்கவேண்டும். இதற்கான உத்தரவைத் தாங்கள் பிறப்பிக்கவேண்டும்''.

## க. பொ. த. பரீட்சை அனுமதிப்பத்திரம்

(யாழ்ப்பாணம்)

செல்வி நடராசா சுமதியின் க. பொ. த. (சாதாரணம்) பரீட்சையின் அனுமதிப்பத்திரம் சட்டத்தரணி டபிள்யூ எஸ். செந்தில் நாதனின் விலாசத்திற்குகிடைக்கப்பெற்றுள்ளதாக சம்பந்தப்பட்டவர் அறிவிக்கிறுர், உரிய பரீட்சார்த்தி பெற்றுக்கொள்ளவும்.

### மணிவாக்கு

பொய் சொல்லித் திரட்டும் பெரும் செல்வமானது, சாகப்போகிறவன் அங்குமிங்கும் புரள்வது போல வீண்மூச்சே!

— பைபிள்

# நமது நோக்கு

## இரண்டும் சரி முந்தியது மெத்தச்சரி

தினம்: ஏழாவது ஆண்டு பொலிஸ் ராணுவ விருது வைபவம்.

இடம்: கட்டுக்குருந்தை.

காலம்: சனி 30-11-85.

இவ்வைபவத்தில் பிரதம அதிதியாகக் கலந்துகொண்ட ஜனாதிபதி ஜெயவர்த்தன வழக்கம்போல் ஆணித்தரமான உரை நிகழ்த்தினர்.

ராணுவத்தினரதும் காவற்படையினரதும் பொறுப்பு இன்று மிக அதிகரித்திருப்பதை நினைவூட்டிய ஜனாதிபதி மூன்று கடமைகளைத் தெளிவாக வற்புறுத்தியிருந்தார்: தேசத்தின் ஒருமைப்பாடு, அதன் சுதந்திரம், ஜனநாயக ஆட்சிமுறை.

இதற்கு அச்சுறுத்தலாக இருக்கும் இன்றைய போரைக் குறிப்பிட்டபோது படைகள் போராடுவது ஒரு களங்கமற்ற - impeccable எதிரி - foe என்றதை நினைவுபடுத்தினர் என்று அவசரப்பட்டு அதனைக் கடந்த ஞாயிறு ஒப்சேவர் (Sunday Observer) வெளியிட்டிருந்தது.

அந்தச் செய்தி அதிசயமாயிருந்தபோதும் சரியானதைச் சரியென்று சொல்லுவது ஜனாதிபதியின் பண்பென்று வாசகர்கள் நினைத்திருக்கலாம்.

3ம் திகதி டெயிலி நியூஸ் impeccable என்ற சொல்லு தவருகச் செய்தியில் இடம்பெற்றுவிட்டதற்கு வருத்தம் தெரிவித்து, intractable என்பதையே ஜனாதிபதி குறிப்பிட்டார் என்று திருத்தம் செய்தது.

உண்மை நிலையை உணர்ந்தவர்கள் இரண்டுக்கும் அதிக வேறுபாடுகாண மாட்டார்கள். தமிழ்ப் போராளிகள் ஒரு குற்றமற்ற போராட்டத்தில் இறங்கியிருக்கின்றனர் என்பது உண்மையாஞல் திருத்தம் அவசியமில்லை என்று கருதுவார்கள்.

இந்தப் போரைக் கண்டித்து தமிழ்ப் போராளிகளில் குற்றம் காண்பவரும் எதிரியை இலகுவில் வெல்ல முடியாதென்ற உண்மையை ஒப்புக்கொள்வார்கள். எனவே இரு சொற்களும் ஒவ்வொரு வகையில் பொருத்தமானவை.

இந்தத் திரிபுக்கு தெய்வம் தான் காரணமோ. இரண்டும் சரி ஆனல் முந்தியது மெத்தச் சரி என்ற உணர்வு ஏற்பட்டால் போர் டப்பென்று நிற்கும்.

## கூட்டுறவின் சிங்கம்

இலங்கை ஒரு ஜனநாயக சோஷலிஸக் குடியரசு என்ற விலாசமுடையது.

இந்த விலாசத்துக்கு மதிப்பளிக்கவல்ல கூட்டுறவுத் தத்துவம் இன்று என்ன நிலையில் இருக்கிறது.

இன்று என்னும்போது ஒரு காலத்தில், குறிப்பாகக் கடந்த இரண்டாவது யுத்த காலத்தில் பொதுமக்களைப் பட்டினியிலிருந்து பாது காத்தது கூட்டுறவு இயக்கமென்பது இன்றைய இளைஞருக்கு நன்கு புலப்படாது.

எந்த முற்போக்கான நடவடிக்கைக்கும் வடக்குத் தலைமையிடம் வகிப்பதைத் தெற்கில் வாழும் சிங்களத் தலைவர்கள் மட்டுமல்ல இலங்கையின் முதலாவது பிரதமர் டி. எஸ். சேனநாயக்காவும் பாராட்டி வந்தார்.

கூட்டுறவுச் சங்கங்கள் வளம்பெற வடக்கு வழிகாட்டி வந்தமையால் அதுவே இந்த இயக்கத்தின் துருவ நட்சத்திரம் என்ற புகழ் வழங்கப்பட்டது.

இதற்குப் பெருமளவிற்குப் பொறுப்பானவர் பெரியார் வீ. வீரசிங்கம் என்பதே யாழ்ப்பாணம் வீரசிங்க மண்டபம் சொல்லும் கதை. கல்விமான், கூட்டுறவாளர், தேசபக்தர் என்பதால் மக்கள் அவரைப் பாராளுமன்றம் அனுப்பினர்கள்.

கூட்டுறவுக்கும், ஆசிரியர்களுக்கும், பாடசாலைகளுக்கும் பெருந்தொடர்பு இருக்கவேண்டுமென்பதை, மானிப்பாய் இந்துக் கல்லூரிக்கு நீண்டகாலம் அதிபராக இருந்த பேராசான் வீரசிங்கத்தின் ஒப்பற்ற சேவை உறுதிப்படுத்துகிறது.

கூட்டுறவு என்றல் மோசடி, களவு, குற்றம் நிறைந்து நாறும் இயக்கம் என்ற அபிப்பிராயம் பொது மக்கள் மத்தியில் ஏற்பட்டதற்கு அரசாங்கத்தின் தலையீடே காரணம்.

தேசிய ஒற்றுமைக்கும், பொருளாதார உயர்ச்சிக்கும் ஏதுவான இப்பெரும் இயக்கம் அரசாங்க நிறுவனங்களுக்கும், தனியார் துறைக்கும் இடைநின்று ஒரு சமத்துவ சமுதாயத்தை வளர்க்கவல்லது.

சம்பீரமான வீரசிங்க மண்டபத்திற்கு இக்காலத்தில் நிகழும் விபத்துக்கள் கூட்டுறவின் இன்றைய அவல நிலையைப் பிரதிபலிக்கிறது.

எவ்வாருஞலும் யாழ்ப்பாணம் கண்ட 'மாஸ்டர்கள்' பலர் தேசியத் தலைவர்களாகத் திகழவல்லவர் என்பதை வீரசிங்கத்தின் 21வது சிராத்த தினம் நினைவூட்டுகின்றது.

## உதவ விரும்புவோர் தொடர்புகொள்க

(யாழ்ப்பாணம்)

பருத்தித்துறை அகதிகள் புனர்வாழ்வுச் சபைக்கு நிதி அல்லது பொருள்உதவி செய்ய விரும்புகிறவர்கள் மேற்படி சபையின் செயலாளர் ந. சிவசுப்பிரமணியத்துடன், சந்தை மேற்கு ஒழுங்கை, பருத்தித்துறை என்ற முகவரியில் தொடர்புகொள்ளும்படி கேட்கப்படுகின்றனர்.

இச்சபை பருத்தித்துறை உதவி அரச அதிபரின் கண்காணிப்பின்கீழும், பருத்தித்துறை பிரஜைகள் குழுவின் அனுசரணையுடனும் இயங்கிவருகின்றது.

# ஆசிரியர் சம்பளம் பெறுவதில் ஏற்படும் தாமதம்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட ஆசிரியர்கள் கடந்த சில மாதங்களாக தமது சம்பளத்தை மாதந்தோறும் இருபதாம் திகதி பெற முடியாது மிகவும் கஷ்டப்படுகிருர்கள்.

கடந்த மாதம் 19-ம், 20-ம், 21-ம் திகதிகளில் பாடசாலை அதிபர்கள், கல்விக்கந்தோருக்குச் சென்று தமது சம்பளப்பத்திரம் தயாரிக்கப்படாததால் இங்குமங்குமாக அலையவேண்டிய நிலை ஏற்பட்டது.

இதுபற்றி அதிபர் ஒருவர் தெரிவிக்கையில் இம்மாதம் 19-ந் திகதி பாடசாலை சம்பளப்பட்டியலைப் பெறச் சென்றபோது 13-ம் இலக்க சம்பளப்பட்டியல் தயாரிக்கும் எழுதுவினைஞர் வரவில்லை என்றும், மறுநாள் சென்றபோது சம்பளப்பட்டியல் தயாரிப்பதாக தெரிவிக்கப்பட்டதாகவும் 21-ந் திகதி மீண்டும் சென்றபோது காசோலை எழுதவில்லை எனத் தெரிவிக்கப்பட்டதாகவும் இதனல் 3 தினங்கள் அலைந்ததாகவும் கூறினர்.

காசோலை எழுதும் பகுதிக்குச் சென்றபோது தனித்தனியாக காசோலை எழுதவேண்டியிருப்பதாகவும் 18பாடசாலைகளுக்கு எழுதவேண்டியிருப்பதால்தாமதமாகும் எனத் தெரிவிக்கப்பட்டதாகவும் மேலும்கூறினர்.

நான்கு நாட்கள் அலைந்தபின் 22-ம் திகதியேனும் சம்பளப்பட்டியலைப் பெறமுடிந்ததாகவும் கூறினர். 23-ம் திகதி சனி, 24 ஞாயிறு, சம்பளப் பணத்தை மாற்றமுடியவில்லை என்றும் 25-ம் திகதி அரசாங்க விடுமுறையாதலால் அன்றும் மாற்றமுடியவில்லை என்றும் தெரிவித்தார். (க)

## யாழ். மக்கள் மன்றம் முன்வைக்கும் சில கருத்துகள்

(யாழ்ப்பாணம்)

கருத்துப்பரிமாறலும் அறிவொளி அபிப்பிராயம் உருவாக்கலும் நோக்கமாகக் கொண்டதான யாழ்ப்பாணம் மக்கள் மன்றம் ஓர் அறிக்கையை விடுத்துள்ளது.

இம்மன்றத்தின் தலைவர் திரு. சோ. வன்னியசிங்கம் விடுத்துள்ள கருத்துக்கள் சில இங்கு தரப்படுகிறது.

இலங்கையின் இன அரசியல் பிரச்சினைக்கு பேச்சு வார்த்தை மூலம் தீர்வுகாண்பதற்கு உபயோகமாக தமிழரின் நிலையை வகுத்துரைக்கும் செயல் திட்டங்களை முன் வைத்தல் வேண்டுமென்று தற்காலிகமாகச் சென்னையில் வதியும் தமிழர் விடுதலைக் குழுக்கட்கு பிரதமர் ராஜீவ் காந்தி விடுத்த கோரிக்கையை இலங்கைவாழ் தமிழ் மக்கள் கருத்திற்கொண்டு நடவடிக்கை எடுத்தல் அவர்கள் கடமையாகும்.

### தேர்வு ஒன்று

இப்பொழுது இயங்கும் 1978ம் ஆண்டு ஒற்றை ஆட்சி அரசமைப்புச்சட்டம் மாற்ற முடியாத நிலையான கட்டுப்பாடு என்ற நிலைமையைச் ஜெயவர்த்தன அரசு கடைப்பிடிக்குமாயின் நமது கோரிக்கை வடக்குக் கிழக்கு மாகாணங்களில் அந்த அரசமைப்புச் சட்டத்தை ஏற்பதாக சாதக வாக்கைக்கோரி ஒருசர்வஜன வாக்கெடுப்பு நடத்தப்பெற்று அவ்வரசமைப்புச் சட்டத்திற்கு முதற்கண் சட்டவலுப் பெறப்படல் வேண்டும். காரண விளக்கம்: ஜனநாயக சோஷலிச சிறிலங்காக் குடியரசை உருவாக்கவும் அக்குடியரசிற்கு அரசமைப்புச்சட்டம் தாயாரிக்கவும் அதிகாரம் தரும்படி திரு. ஜயவர்த்தனவின் தலைமையிலான யு. என். பிக் கட்சி 1977-ம் ஆண்டுத் தேர்தலில் கோரிக்கை விடுத்தது. அக்கோரிக்கைப்படி சாதக வாக்கின் மூலம் ஏழு மாகாணங்களில் மட்டுமே மக்களால் குறிப்பிட்ட அதிகாரம் வழங்கப்பெற்றது. வடக்குக் கிழக்கு மாகாண மக்கள் அக்கோரிக்கையை நிராகரித்து அதிகாரம் வழங்க மறுத்துவிட்டனர். அளித்த மொத்த 842899 வாக்குகளில் 198137 வாக்குகள் மட்டுமே கோரிக்கைக்கு சார்தகமாகின. எனவே இவ்வரசமைப்புச் சட்டம் வடக்குக் கிழக்கைப் பொறுத்த மட்டில் நியாதிக்கமற்றதும் சட்டவலு இல்லாததுமாகும் எனவே அந்த அரசமைப்புச் சட்டத்திற்கு வடக்குக் கிழக்கில் நடாத்தப்பெறும் சர்வசன வாக்கெடுப்பின் மூலம் சட்டவலுப் பெற்ற பின்னரே அவ்வரசமைப்புச் சட்டத்தின் கீழ் என்ன பேச்சு வார்த்தையும் நடாத்தமுடியும். வன் செயல் இயல்பாகவே நின்றுவிடும்.

### தேர்வு இரண்டு

வடக்கு கிழக்கு மாகாணங்களை உள்ளடக்கும் ஈழம் என்ற மாநிலம் ஒன்ருக அமையும் இலங்கை ஐக்கிய மாநிலங்கள் என்ற நாமத்தில் இயங்கும் ஒரு சமஷ்டி அரச சமுதாயத்தை உருவாக்கல் சமஷ்டி அரசமைப்பு அமெரிக்க ஐக்கிய மாநிலங்களின் அரசமைப்பு முறையைத்தழுவி ஒருமைப்பாட்டுடன் நிர்ணயிக்கப்படல் வேண்டும்.

### தேர்வு மூன்று

ஜனாதிபதி ஜெயவர்த்தனவின் அரசு மேற்கூறப்பெற்ற இரண்டு தேர்வுகளில் ஏதாவது ஒன்றையும் கையாள விரும்பாவிடின் இப்பிரச்னையை மத்தியஸ்தத்துக்கு விடப்படட்டும் மத்தியஸ்தங்களில் அநுசரிக்கப்படும் வழமையான நடைமுறைகளைப் பின்பற்றுவோம்.

சிறிலங்கா அரசு தேர்வு ஒன்று என்று கூறப்பெற்ற சர்வசன வாக்கெடுப்பைக் கையாள்வதாயின் அத்தகைய சர்வசன வாக்கெடுப்பில் நிலவவேண்டிய முன் நிபந்தனைகளைப் பேச்சுவார்த்தை மூலம் நிர்ணயித்துக்கொள்வோம்.

முடியாட்சி சாம்ராச்சியம் ஆகியவற்றில் கையாளப்படும் அவரோகண அதிகார ஒப்படைப்பு முறை, அதாவது மேலிருந்து கீழ் அதிகாரம்வழங்கப்படுதல் (Devolution) மக்களிடமே இறைமை வதியும் குடியரசு முறைக்கு ஒவ்வாததென்பதனை உறுதியாகக் கூறி ஜயவர்த்தன அரசு சிபார்சு செய்த மாகாண சபைத் திட்டம் ஏற்கமுடியாததென்பதை அழுத்தந் திருத்தமாகக் கூறுகின்றேம்.

மாநில ஆட்சி மக்களுடைய தன்ஞதிக்கமான இறைமையிலிருந்து ஒப்படைக்கப்படும் அதிகார அடிப்படையிலே (Autonomy) நிறுவப்படல் வேண்டும். மக்களிடமிருந்து அதிகாரம் பெற்று மக்களுக்கே பொறுப்புக் கொடுக்கும் தத்துவ அடிப்படையிலேயே மாநில ஆட்சி அமைக்கப்பட வேண்டும்.

ஜனாதிபதியிடமிருந்து அதிகாரத்தைப் பெற்று அவ்வதிகாரத்தை மக்கள் மீது பிரயோகித்து ஜனாதிபதிக்கோ அல்லது அவரின் ஏவலாளர்க்கோ கணக்குக் காட்டிப் பொறுப்புக் கொடுக்கும் அவரோகண அதிகார ஒப்படைப்பு முறை ஏற்கமுடியாதது.

(5ம் பக்கம் பார்க்க)

## பிள்ளையார் கதை



பிள்ளையார் கதை விரதம் என்னும் விநாயக சஷ்டி விரதத்தை சிவபெருமான்- உமையம்மையார்- திருமால் ஆகியவர்களும் அனுட்டித்து நன்மை பெற்றுள்ளனர். இவர்கள் விரதமிருந்த தன்மைகளையும் அடைந்த பயன்களையும் கூறுவதற்காக பிள்ளையார் கதையில் முருகப் பெருமானின் தோற்றம்- முருகன்- சூரனைச் சங்கரித்தமை- முருகன், தெய்வானை அம்மை திருமணம் முதலியவை ஓரளவு விரிவாகக் கூறப்பட்டுள்ளன.

ஒரு சந்தர்ப்பத்தில் சிவபெருமான் முருகப் பெருமானைக் கோபித்துக் கண்டித்தார். தான்செய்யாத குற்றத்துக்குச் சிவபெருமான் தன்னைக் கோபித்தார் என்று முருகன் தாய் தந்தையரை விட்டுப்பிறதேசம் போனர். முருகன் பிரிவால் உமையம்மைக்கு ஏற்பட்ட கவலை மாற சிவனும் உமையும் சூது விளையாடினர். இவர்களது விளையாட்டுக்குத் திருமால் நடுவராக இருந்தார்.

விளையாட்டில் சிவபெருமான் தோல்வியுற்ருர். உமையம்மை தனக்கே வெற்றி என்றுகூற சிவனும் தனக்கே வெற்றி என்ருர். அப்போது யார்வென்றது என்ற கருத்தில் உமை திருமாலை நோக்கினர். சிவனும் திருமாலை நோக்க; திருமால் சிவபெருமானுக்கே வெற்றி என்ருர்.

திருமாலின் தீர்ப்பால் உமையம்மையார் அதிக கோபங்கொண்டு பொய்ச் சாட்சி சொன்ன குற்றத்திற்காக குருட்டுப் பாம்பாகி ஆலின்கீழ் இருக்கும்படி சபித்தார். விநாயகப் பெருமான் இருந்த ஆலமரப் பொந்தில் திருமால் பாம்பாக இருந்தார்.

பூவுலகில் உள்ளவர்கள் விநாயக சஷ்டி விரத மகிமையை அறியவேண்டும் என்பதற்காக ஏழுதேவப் பெண்கள் பூவுலகிற்கு வந்துதிருமால் பாம்பாக வந்து இருந்த ஆலமரத்தின் கீழ் எழுந்தருளிய விநாயகர் முன் விநாயக சஷ்டி விரதத்தை அநுட்டித்தனர்.

—அருளாளன்

# தொழிலாளர்தாக்கப்படுவதை உடன் தடுக்கவும்

## ஜனதிபதிக்கு வ. பி. தொ. சங்கம் மகஜர்

(யாழ்ப்பாணம்)

வட பிரதேச தொழிற் சங்கங்களின் கூட்டுக்குழு; ஆயுதப்படையினரால் கொல்லப்பட்டவர்கள், ஊனமுற்ருேர் பட்டியலை மீண்டும் ஜனதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தனுவுக்கு அனுப்பிவைத்துள்ளது.

கொலை செய்யப்பட்டவர்கள் ஊனமுற்றவர்களின் பட்டியலை ஏற்கனவே கூட்டுக்குழு ஜனதிபதிக்கு அனுப்பியிருந்தது. ஆனல் அதுசம்பந்தமாக எதுவித நடவடிக்கைகளும் இதுவரை எடுக்கப்பட்டதாகத் தெரியவில்லை.

தொடர்ந்தும் தொழிலாளர்கள் ஆயுதப் படையினரால் கொலை செய்யப்பட்டுவருகிருர்கள். அதனை உடன் தடுத்து நிறுத்துவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படவேண்டுமெனவும் இம்மகஜரில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

கூட்டுக்குழு முன்வைத்துள்ள ஐந்து அம்சக் கோரிக்கையின் அடிப்படையில் பிரச்னைகளைத் தீர்த்துவைக்கும்படியும் தொழிற்சங்கங்கள் கோரியுள்ளன.

இதன் பிரதிகள் தென்னிலங்கை தொழிற்சங்கங்களுக்கும் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன. (மா)

## அகதிகளுக்கு அன்பளிப்பு

(யாழ்ப்பாணம்)

உலக இந்து மகாசபை, இலங்கைக் கிளையும் யாழ். மாவட்ட மங்கையர் கழகமும் ஒன்றிணைந்து வேலணை, கோப்பாய் உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளில் தங்கியிருக்கும் அகதிகளுக்கு ரூபா 112, 000 பெறுமதியுள்ள துணி வகைகளும், பால்மாவும் அன்பளிப்பாக வழங்கப்பட்டது.

வேலணை உதவி அரசாங்க அதிபர் காரியாலயத்தில் கடந்த சனிக்கிழமையும் கோப்பாய் உதவி அரசாங்க அதிபர் காரியாலயத்தில் ஞாயிற்றுக்கிழமையும் மேற்படி அன்பளிப்புகள் செய்யப்பட்டன. இவ்விரு தினங்களிலும் நல்லை ஆதீன முதல்வர் சமூகமளித்து, அகதிகளுக்கு ஆசியுரைகூறி அன்பளிப்பு வைபவத்தைத் தொடக்கி வைத்தார். (க)

## ஒரு கோடி மரங்கள்

(வண்ணுர்பண்ணை)

1986-ம் ஆண்டு கால போகத்தில் யாழ். மாவட்டத்தில் ஒரு கோடி மரங்களை நடுவதற்கான திட்டமொன்றை தொழிலதிபர் திரு. கே. சனகராசா தயாரித்துள்ளார். இந்த ஒருகோடி மரக்சன்றுகளை உற்பத்தியாக்குவதற்கான நாற்று மேடைகள் இம்மாதம் முதல் போடப்பட்டுவருகின்றன.

அடுத்த வருடத்திட்டத்தில் பயன்தரும் மரங்கள், நிழல்மரங்கள், பழமரங்கள் அதிகளவில் வழங்குவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளன.


## 7-வது பிறந்தநாள் வாழ்த்து

### செல்வி லிஜிதா சுந்தரராஜன்

திரு. சுந்தரராஜன் லிங்கேஸ்வரி தம்பதிகளின் செல்வப்புதல்வி லிஜிதா தனது ஏழாவது பிறந்தநாளை இன்று (5-12-85) வியாழக்கிழமை அண்ணு சுஜிதனுடன் பரித்திகலட்டி சுண்ணுகத்தில் கொண்டாடுகிருர். இவரை அப்பா, அம்மா, அப்பாச்சி, சித்தப்பாமார், ஐயா, அம்மம்மா, சித்தி, மாமன்மார் சீரும் சிறப்புடனும் பல்லாண்டு வாழ வாழ்த்துகிருர்கள்.

(2169)



## நியூ விக்ரேஸ்

புதிய வீடியோ பட வெளியீடு

1. குலப்பம்

★ மோகன், ★ 'காலஞ்சென்ற நடிகை' ஷோபா

## நியூ விக்ரேஸ்

எலெக்ரோனிக் கொம்பிளெக்ஸ்

தொலைபேசி; 23532 [2171]



## அமரர் கந்தையா சச்சிதானந்தன்

றிசேர்வ் பொலிஸ் R. P. C. 4943

## 7-வது நினைவஞ்சலி



மங்கள மலர்வு:
24-08-1956

அகால உதிர்வு:
05-12-1978

உங்கள்
ஆத்ம சாந்திக்காக
பிரார்த்திக்கும்

அன்னரின்
குடும்பத்தினர்.

சிறுப்பிட்டி தெற்கு,
நீர்வேலி.

[2170]


## துணிவகை உதவி

(வண்ணுர்பண்ணை)

மயிலிட்டியில் இயங்கும் அரசாங்க மார்பு நோய்ச் சிகிச்சை வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவரும் வசதி குறைந்த காச நோயாளர்களுக்கு மூன்று ஸ்தாபனங்கள் துணிவகைகளை வழங்கி உதவி புரிந்துள்ளன.

வைத்தியசாலையின் மார்பு நோயாளர் சங்கத்தின் வேண்டுதலுக்கமைய இந்நோயாளர்களை நேரில் சந்தித்து உரையாடிய மேற்படி ஸ்தாபனங்களின் பிரதிநிதிகள் துவாய் போன்ற துணி வகைகளை வழங்கி உதவினர்.

சுன்ஞகம் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் சார்பில் சங்கத் தலைவர் திரு. சி. குமரவேல், யாழ். மாவட்ட இந்து இளைஞர் பேரவையின் சார்பில் அதன் தலைவர் திரு. தி. சி. சண்முகலிங்கம், இணுவில் கிராம அபிவிருத்திச் சங்கத்தின் சார்பில் அதன் தலைவர் திரு. செ. இலகுநாதன் ஆகியோர் நோயாளர்களுக்குத் துணி வகைகளை வழங்கினர்.

## கற்கோவளத்தில் இணக்க சபை

(புலோலி)

கற்கோவளம் கிராமசேவை அலுவலர் பிரிவில் இணக்க சபை ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. இவ் இணக்கசபையின் தலைவராக திரு. முத்து தணிகாசலமும், உப தலைவராக திரு. வ. துரைசிங்கமும் செயலாளராக திரு. எஸ். தேவதாசனும் உப செயலாளராக திரு. இ. ஹரிதாசும் பொருளாளராக திரு. வ. இராமலிங்கமும், செயற்குழு உறுப்பினர்களாக திரு எஸ் வேலும் மயிலும்திரு. என். பாலசூரியமூர்த்திதிரு. கி· சண்முகநாதன் திரு. சி. அற்புதராசா, திரு. மாணிக்கவாசகம் ஆகியோரும் தெரிவு செய்யப்டுள்ளனர்.

## ஆசிரியர்...

(4 ம் பக்க தொடர்ச்சி)

மேலே கூறப்பெற்ற செயல் திட்டங்களை முன்வைப்பதை விடச் சாதாரண சிங்கள மக்களைத் திறந்த மனதுடன் தமிழரின் நிலைமையில் தங்களைக் க்றடனை செய்து பின்வரும் வினக்கட்கு விடைபகர முன்வருமாறு வேண்டுகோள் விடுக்கிருேம்:-

1. சிங்களவருக்கு உரித்தானது போன்ற சுயாட்சி தமிழருக்கு இல்லையா?

2· பல்கலைக்கழகம் உயர் கல்வி நிலையங்கள் கண்ணியத் தொழில் அரசசேவை ஜனத்தொகை விகிதப் பங்கீடுஎன்ற சிக்கலான செயல்முறையைச் நீங்ஙள் சுமக்காமல் தமிழரைத் தமதிச்சைப்படி விட்டால் அனைத்து இடங்களும் வாய்ப்புகளும் உங்களுக்கே சொந்தமாகி விடுமே?

3. வடக்குக் கிழக்கில் பயனற்ற யுத்தம் நடத்துவதற்காசப் பயன்தரும் வளங்களை விரயமாக்கி, பற்ருக்குறை வரவுசெலவைப் பாரிய அளவில் வளர்த்து வானளாவும் விலைவாசி ஏற்றத்தை உருவாக்குவதன் காரணமென்ன?

3. போர்த்துக்கீசர் கோட்டே அரசை ஆக்கிரமித்தபொழுது யாழ்ப்பாண மன்னர் பல்வேறு வகையில் உதவி வழங்கவில்லையா? புத்தரின் புனித தந்தம் அடைக்கலப் பாதுகாப்பிற்கு யாழ்ப்பாண மன்னனிடம் ஒப்படைக்கப்படவில்லையா?

5. ''நாங்கள் உங்களைத் தனியே விடுகிருேம். நீங்கள் எங்களைத் தனியே விடுங்கள்'' என்டது ஒரு உகந்த தத்துவமல்லவா?

வெளியேயிருந்து இலங்கைக்கு ஆபத்து ஏற்பட்டால் தம் சொந்த நயத்திற்காகவே தமிழரும் சிங்களவரும் ஒத்தியங்குவார்கள்.

## லொறிகளில்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

படும் குண்டர் கோஷ்டியினர் பாதையில் மரக்குற்றிகளைப் போட்டு லொறிகளைத்தடுத்து பொருள்களை கொள்ளை அடிக்கின்றனராம். (ய-மா)

## அப்பாவி....

(1 பக்க தொடர்ச்சி)

விடுத்துள்ளார்.

நேற்று நடைபெற்ற செய்தியாளர் மகாநாட்டைத் தொடர்ந்து விடுக்கப்பட்ட அறிக்கையிலேயே மேற்படி கோரிக்கை விடுக்கப்பட்டது.

''பயங்கரவாதிகளை ஒழித்தே தீரவேண்டும். அதிலும் பயங்கரவாதிகளை மட்டுமே ஒழித்தாக வேண்டும். அப்பாவித் தமிழர்களைக்கொல்வது சோழைத்தனமாகும். அவர்களைக் கொலைசெய்து அவர்களின் பொருட்களை நாசம் செய்தால் நாமும் பயங்கரவாதிகளாவோம். தமிழ் மக்களில் ஒரு பகுதியினரே பயங்சரவாத நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளனர்'' என்றும் மேஜர் ஜெனரல் ரணதுங்கா தமது அறிக்கையில் தெரிவித்துள்ளார்,

## நடைபவனி...

(1 ம் பக்க தொடர்ச்சி)

இப்பகுதி மக்கள் பதற்றமடைந்து தங்கள் இருப்பிடங்களை விட்டு அங்குமிங்குமாக ஓடத்தொடங்கினராம். இவர்சள் கைதடி, அரியாலை ஆகிய இடங்களில் தஞ்சம்புகுந்துள்ளனர். (மா)

## பெந்தோட்டை...

(1 ம் பக்க தொடர்ச்சி)

ஞல் மாத்திரம் இலங்கையில் இனப்பிரச்னை தோன்றவில்லை. ஏனெனில் 1940ம் ஆண்டில் தனிச்சிங்களச் சட்டம் கொண்டுவர வேண்டுமென்று தற்போதைய ஜனதிபதி திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தனு கோரியிருந்தார்'' என்றும் அவர் தெரிவித்தார்.

## ரூபவாஹினி

மாலை

5-00 செய்திகள்
5-05 'கார்ட்டூன்'
5-30 கார்ட்டூன் படம் (சிங்களம்)
6-00 விலங்கு ராஜ்யம்
6-30 செய்திகள் (தமிழ்)
7-00 நடைமுறை அலுவல்கள் (சிங்களம்)
7-25 'அண்டுன' (சிங்களம்)
8-00 செய்திகள் (சிங்களம்)
8-25 தொலைக்காட்சி நாடகம்
9-00 செய்திகள் (ஆங்கிலம்)
9-25 ஐக்கிய நாடுகளின் 40 வது ஆண்டுவிழா (மறு ஒளிபரப்பு)
9-50 பேட்டி நிகழ்ச்சி
10-15 உலகயுத்தம், அங்கம் 10
11-10 ஒளிபரப்பு முடிவு

## ஜீ. சி. ஈ. பரீட்சை தடங்கலின்றி நடைபெறுமென ஆணையாளர் நம்பிக்கை

(கொழும்பு)

இம்மாதம் 7-ம் திகதி நடைபெறவிருக்கும் கல்விப் பொதுத்தராதர (சாதாரண) பரீட்சை, கடந்த சில காலங்களைப் போல எதுவித தடங்கலுமில்லாமல் நடைபெறுமென்று தாம் எதிர்பார்ப்பதாக பரீட்சை ஆணையாளர் நம்பிக்கை தெரிவித்துள்ர்ளா. (மா)

## நாளை மறுதினம்..

1-ம் பக்கத் தொடர்ச்சி)

நாடெங்கிலும் ஆரம்பமாகவுள்ளது தெரிந்ததே.

மூதூரிலுள்ள பாடசாலை மாணவர்களை, திருகோணமலைப்பகுதியிலுள்ள பரீட்சை நிலையங்களுக்கு சமூகமளிக்க வேண்டுமென்று பரீட்சைத் திணைக்களத்தால் அறிவிக்கப்பட்டுள்ளது.

மூதூரிலிருந்து திருகோணமலைக்கு 10 மைல் தூரம் கடல் பாதை மூலமே மாணவர்கள் வரவேண்டியுள்ளது. பரீட்சை எழுதும் மாணவர்கள் திருகோணமலைக்கு வந்தாலும் அவர்களின் பாதுகாப்புக்கு உத்தரவாதமில்லை என்றும், கடந்த 6 மாதகாலமாக இடம்பெற்றுவரும் வன்முறைச் சம்பவங்களால் மாணவர்கள் பரீட்சைக்குத் தம்மை தயார் படுத்திக் கொள்ளமுடியாத சூழ்நிலையிலிருந்துள்ளனர் என்றும் பிரஜைகள் குழு உறுப்பினர் ஒருவர் தெரிவிக்கிருர்.

அதிகமான பாடசாலைகளில் வன்முறைச்சம்பவங்களால் பாதிக்கப்பட்ட அகதிகள் தங்கியிருப்பதால்மாணவர்கள் தொடர்ந்து கல்விகற்க முடியாததும் ஒரு முக்கிய காரணம் என்றும் அவ்வுறுப்பினர் கூறுகிருர்.

இம் மாணவர்களின் அவலநிலை குறித்து பிரஜைகள்குழு உயரதிகாரிகளுக்கு மகஜர்கள் அனுப்பி வைத்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (மா)

## ''சர்வதேச....

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

சர்வதேச மன்னிப்புச்சபையின் அக்டோபர் மாத அறிக்கையில், 'இலங்கையில் தொடர்ச்சியானசித்திரவதை' என்ற தலைப்பில் வெளியான செய்தியில் பலமுரண்பாடுகள் காணப்படுவதாகச் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

கொழும்பில் நேற்று நடைபெற்ற செய்திநிருபர்கள் மகாநாட்டில் கலந்துகொண்ட பாதுகாப்பு அமைச்சின் மேலதிகச் செயலாளரான கலாநிதி வீக்கிரமவீரசூரிய, லண்டனில் இந்த அறிக்கை தயாரிக்கப்பட்டதாகத் தெரிவித்தார்.

இந்த அறிக்கையில் குறிப்பிட்டபடி, கைதானேர் பரந்த அளவில் சித்திரவதைக்கு உள்ளாக்கப்படவில்லை என்றுஅவர் கருத்து வெளியிட்டார்.

பாதிக்கப்பட்டவரின் உறவினர்கள், சுயம் இளைத்தவர்கள் வழக்கறிஞர்கள் ஆகியோரிடமிருந்து தகவல்கள் கிடைத்திருப்பதாக அறிக்கை சுட்டிக் காட்டியுள்ளதுடன், மக்கள் விடுதலை முன்னணியைச் சேர்ந்த கைதிகளும், மற்றைய கைதிகளும் இராணுவ, பொலிஸ் முகாம்களில் சித்திரவதைக்கு உள்ளாக்கப்பட்டார்கள் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

இலங்கையில் பொலிஸ் முகாம்கள் எதுவும் இல்லை என்று கூறிய கலாநிதி விக்கிரம வீரசூரியா; இலங்கையில் சத்தியக்கடதாசிகளைப் பெறுவது மிக சுலபமென்றும் இவ்வாருன பத்திரங்களை இட்டு சர்வதேச மன்னிப்புச் சபையின் அறிக்கை முரண்பாடாக இருக்கிறபொழுதிலும் இந்தப் பத்திரங்களைப் பதிவு செய்தவர்களின் பெயர்களை இலங்கை அரசுக்கு தெரிவிக்கவில்லையென்று தெரிவித்தார்.

வவனியா இராணுவ முகாமில் தடுத்துவைக்கப்பட்ட தமிழர்கள் இராணுவத்தினரால் கொல்லப்பட்டார்கள் என்ற செய்தி பற்றி கலாநிதி விக்கிரம வீரசூரியா கருத்து தெரிவிக்கையில்; இராணுவ முகாமை தீவிரவாதிகள் தாக்கியபோது ஏற்பட்ட துப்பாக்கிச்சண்டையிலேயே தடுத்து வைக்கப்பட்ட இந்த தமிழர்கள் கொல்லப்பட்டார்கள் என்று கூறினர். (பி)

# "கோட்டைகளின் ரகசியத்தைதெரிந்தவர்கள் இன்று அவற்றைப் பயன்படுத்துகிறார்கள்!"

## நிறுவன நினைவு தினத்தில் சண்முகதாஸ்

(யாழ்ப்பாணம்)

''அந்தக்காலத்தில் போத்துக்கீசர், ஒல்லாந்தர்கள் எமது நாட்டின் கேந்திர ஸ்தானங்களிலே கோட்டைகளைக் கட்டினார்கள். இதன் இரகசியங்களை அன்றைய தேசாதிபதிகளின் அறிக்கைகளில் இருந்து தெரிந்து கொள்ளலாம். அந்த வரலாறுகளைத் தெரிந்தவர்கள் இன்று அதனைப் பாவிக்கின்றனர். உடமைகள், உயிர்கள் அழிந்துவிடலாம் ஆனால் கல்வியும் இதனால் ஏற்படும் உணர்வுகளும் அழிக்கப்படமுடியாதவையாகும்.

சட்ட நிருபண சபையில் தேசாதிபதியை எதிர்த்து எவரும் பேச முடியாத அக்காலத்தில்; அவ்வெள்ளையர் நம்நாட்டுக்கு வகுத்திருந்த கல்விக் கொள்கையை எதிர்த்துப் பேசிதமிழ் மொழிக் கல்வியை தாய்மொழிக் கல்வியை வற்புறுத்திய அமரர் திரு. கனகரத்தினம் வருங்காலத்தையும் கருத்தில் கொண்டே இவ்வாறு செயலாற்றினார்.''

யாழ். கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயத்தில் நடைபெற்ற கல்லூரி நிறுவுநர் கனகரத்தினம் நினைவு தினப் பேருரையை நிகழ்த்துகையில் யாழ். பல்கலைக்கழக தமிழ்த்துறைத் தலைவர் பேராசிரியர் அ. சண்முகதாஸ் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

வித்தியாலய அதிபர் திரு. மு. இராமலிங்கம் தலைமை வருடாந்தப்பரிசளிப்பு விழாவும், நிறுவுநர் தினமும் கொண்டாடப்பட்ட போது பேராசிரியர் தொடர்ந்து கூறியதாவது -

''தாய் மொழி எமது உணர்வை வளர்ப்பது பிற மொழி எமது உடம்பை வளர்க்கவே உதவும் ''பிற மொழியில் சிந்திப்பது'' என்று கூறுவது எல்லாம் பொய்யாகும். ஆங்கில கல்வித் திணிப்பு எமக்கு ஏற்பட்ட போது அதனை எதிர்த்து வடமாகாணத்தில் முதன் முதல் 1928 ல் நிறுவப்பட்ட கல்லூரி இதுவாகும். அகில இலங்கையிலுமே முதன்முதல் ஆங்கிலக் கல்விக்கு எதிர்ப்பாக ஸ்தாபிக்கப்பட்ட கல்லூரி இந்த ஸ்ரான்லி கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலயமே ஆகும். திரு. கனகரத்தினம் கல்வியில் மட்டும் அக்கறை கொண்டு உழைத்தவரல்ல, ஈழத்துப் தமிழ்ப்பத்திரிகை வரலாற்றிலே முக்கிய இடத்தைப் பெற்றுள்ள ''இலங்கை பிமானி'' பத்திரிகையின் ஆசிரியராகப் பலவருடங்கள் கடமை புரிந்துசெயல்பட்டவர். யாழ்ப்பாணம், மன்னார் மாவட்டங்களுக்கு இலங்கைச் சட்டநிருபணசபை அங்கத்தவராக விளங்கிய திரு. கனகரத்தினம்; கல்விச் சேவைச் சபைத் தலைவராகவும், கல்வி அபிவிருத்திக் குழு, வேலைவாய்ப்புக் குழு, விமசாயச் சங்கம் தேசவழமைக் குழு, மலேரியாத் தடுப்புச் சங்கம் ஆகியவற்றில் அங்கத்தவராகவும் இருந்து அருந்தொண்டாற்றினார்.

''சேர் பொன்னம்பலம்-இராமநாதனின் சம காலத்தவரான திரு. ஆறுமுகம் கனகரத்தினம் பற்றிய ஆய்வுகள் அவசியம் செய்யப்படவேண்டும். அவரைப் பற்றிய நூல்கள் வெளிவருவது அவசியமாகும்'' என்றார்.

வருடாந்தப் பரிசளிப்புவிழாவையும், நிறுவுநர் நினைவு தினத்தையும் நல்லூர் வட்டாரக் கல்வி அதிகாரி திரு. சு. சிவநாயகமூர்த்தி, மங்கள விளக்கேற்றி ஆரம்பித்து வைத்தார். மாணவருக்கான பரிசில்களை வடபிரதேசக் கல்விப் பணிப்பாளர் திரு. ம. சிமியாம்பிள்ளை வழங்கினார். கல்விப் பணிப்பாளர் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு பேசுகையில்; ''நம் சமூகத்துக்கு ஏற்பட்டுள்ள பாதிப்புக்களைச் சமாளிக்க மாணவர்கள் ஒழுக்கமுள்ளவர்களாக வாழச் சமயக்கல்வியைக் கற்கவேண்டும். இக்கல்லூரியின் எதிர்காலம் மிகவும் நல்லதாக அமையும் என்பதில் எமக்கு நம்பிக்கை உண்டு. குறுகிய காலத்தில் இக்கல்லூரி மிகவும் முன்னேறி உள்ளதற்கு இக்கல்லூரி அதிபர் திரு. மு. இராமலிங்கமே காரணமாவார். இப்பாடசாலையின் அதிபர் தமது பிள்ளைகளையும் இப்பாடசாலையிலேயே சேர்த்துப் படிப்பிப்பது மிகவும் துணிவான செயலாகும். இதனை அதிகம் காணமுடியாது. இக்கல்லூரிக்கு இரண்டு லட்சத்து ஐம்பதாயிரம் ரூபாவை ஒதுக்குவதற்கு ஏற்பாடு செய்துள்ளேன்''

வரவேற்புரையை சிரேஷ்ட மாணவர் தலைவர் செல்வன் த. குணசீலன் நிகழ்த்தினார். நன்றியுரையை ஆசிரியர் கழகத் தலைவர் திரு. மு. விஸ்வநாதனும், சிரேஷ்ட மாணவி செல்வி ந. மஞ்சுளாவும் கூறினார்கள். பாடசாலை மாணவர்களின் கலை நிகழ்ச்சிகளும் இடம்பெற்றன. [ஐ]

## நான்கு பெண்கள் 6 நாட்களின் பின் விடுதலை

(திருகோணமலை)

திருகோணமலை, மூதூர் ஆகிய இடங்களில் ஆயுதப் படையினரால் கைதுசெய்யப்பட்ட நான்கு இளம்பெண்கள், ஆறு நாட்களின் பின்னர், பிரஜைகள் குழுவினர் எடுத்த நடவடிக்கையின்பேரில் விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

கைதுசெய்யப்பட்ட நான்கு இளம்பெண்களும் திருகோணமலை பொலிஸ்நிலையத்திலே விசாரணைக்காக தடுத்துவைக்கப்பட்டிருந்தனராம்.

திருகோணமலைப் பிரஜைகள் குழுத் தலைவர் திரு. சிவபாலனும் உபதலைவர் திரு.பி.ஆர். பெர்னாண்டோவும் பொலிஸ் அதிகாரிகளைச் சந்தித்து, தகுந்த காரணம் காட்டியதன் பேரில் கைதுசெய்யப்பட்ட நான்குபெண்களையும் பொறுப்பேற்றுத் தாய் தந்தையரிடம் ஒப்படைத்தனர். (மா)

## பாவனையாளர் சங்க கருத்தரங்கு

(சுண்டுக்குளி)

மட்டுவில் வடக்கு பாவனையாளர் சங்க கருத்தரங்கும், கலந்துரையாடலும் மட்டுவில் கமலாசினி வித்தியாலயத்தில் நடைபெற்றது. கருத்தரங்கில் வியாபாரிகள், பாவனையாளர்கள், பேக்கரி உரிமையாளர்கள் கலந்து கொண்டனர்.

வியாபாரிகளுக்கு விலைக் கட்டுப்பாட்டுச் சட்டம், பாவனையாளருக்குப் பாதுகாப்புச்சட்டம் நிறுவைகள், அளவைகள் சட்டம் என்பன சம்பந்தமாகவும் அவற்றினை நடைமுறை தவறும்போது பாவனையாளர், வியாபாரிகள் ஆகியவர்களுக்கு ஏற்படுகின்ற நன்மைகள் பற்றியும், அவற்றினை முறை தவறி உபயோகிப்பதன் மூலம் ஏற்படுகின்ற தீமைகள் பற்றியும் விளக்கப்பட்டது. உள்நாட்டு வியாபார பரிசோதகர் திரு. மு. க. நவரத்தினம்இதற்கான ஏற்பாடுகளைச் செய்திருந்தார்.

# "கல்வித்தர உயர்வுக்கு தூண்டுகோலாகும்"

[யாழ்ப்பாணம்]

''பகுதி நேர ஆசிரியர் கல்விப் பயிற்சி நெறி பட்டதாரி ஆசிரியர்களுக்கு ஒரு வரப்பிரசாதமாகும். யாழ் பிரதேசத்தில் கல்வித்தர உயர்வுக்கு இது தூண்டுகோலாக விளங்கும். இப்பயிற்சி நெறி விரைவில் ஆரம்பமாகும்''

யாழ்.பல்கலைக்கழக கல்விப் புலப்பின் பட்டப்படிப்புமாணவர் பிரியாவிடையின். போது பேராசிரியர் ப. சந்திரசேகரம் மேற்கண்டவாறு கூறினார்.

பேராசிரியர் சந்திரசேகரம் மேலும் கூறியதாவது:

''யாழ்.பல்கலைக்கழக கல்வியியற்புலம் இளமையானதாக இருப்பினும் கல்வி உலக வளம்படுத்தும் சிறந்த பாரம்பரியங்களை ஆக்கித் தந்துள்ளது. இருநூறுக்கு மேற்பட்ட பட்டதாரி ஆசிரியர்களும் கல்வி நிருவாகிகளும் தகைமைச் சான்றிதழ் பெற்றுள்ளனர். இருபத்தைந்து பேர் முதுகலைமாணிப் பட்டத்தையும் ஒருவர் கலாநிதிப் பட்டத்தையும் பெற்றுள்ளனர். கல்வியியற் புலத்தில் தமிழ், ஆங்கிலம் ஆகிய துறைகளில் பல அரிய எழுத்தாக்கங்கள் வெளியிடப்படுகின்றன. ஆய்வுரைகள் வழங்கப்படுகின்றன. கல்வியியற் சமத்துவம், அன்னை மொழிமூலம் கல்வி, கலைத்திட்டவாக்கல், மலையகப் பள்ளிக்கூடங்களைத் தேசிய கல்வித்திட்டத்தினுள் அமைத்தல் ஆகிய அடிப்படைக் கொள்கைகளை கல்வியியற்புலம் அரசிற்கு வழங்கியுள்ளது.

எமது கல்வியியற்புல விரிவுரையாளர்கள் ஒவ்வொருவரும் தத்தமது துறைகளிலே ஆழ்ந்த திறமைகொண்ட நிபுணர்கள். சமூக நலன் கருதிச் சிரமம் பாராது பணி புரிபவர்கள். அவர்களுடைய பணிகள் யாழ். மாவட்டத்திலுள்ள பாடசாலைகளுக்கு நேரடியாகவும் மறைமுகமாகவும் கிடைத்து வருகின்றன.

இவ்வைபவத்தில் விரிவுரையாளர்கள் வ. ஆறுமுகம், க. சின்னத்தம்பி, கலாநிதி. கருணானந்தன், சபா. ஜெயராஜா ஆகியோரும் உரையாற்றினர். யாழ். சென். ஜோன்ஸ் கல்லூரி ஆசிரியர் திரு. சிதம்பரநாதன் நன்றி கூறினார். [நா]

## 6ம் வகுப்பு பரீட்சை

(புலோலி)

1986 ம்ஆண்டு வட இந்து மகளிர் கல்லூரியில் 6ம் வகுப்பில் சேர்ந்து கொள்ளும் மாணவிகளுக்கான பிரவேசப் பரீட்சை இம்மாதம் 11ம் திகதி நடைபெறவுள்ளது.

இவ் வகுப்பில் சேர்ந்து கொள்ள விரும்புபவர்கள் இம் மாதம் 6ம் திகதி வரை விண்ணப்பிக்கலாம் என்று கல்லூரி அதிபர் திருமதி. சுப்பிரமணியம் அறிவித்துள்ளார்.

## சோவியத் நாடு வாசகர் வட்டத்தின் ஆண்டுக் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

சோவியத்நாடு சஞ்சிகையின் வாசகர் வட்டத்தின் முதலாவது ஆண்டுக்கூட்டம் சனி காலை 10-00 மணிக்கு லங்கா தொழிற்சங்களின் பணிமனை கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது.

வாசகர் வட்டத்தின் யாழ். கிளைத்தலைவர் தலைமையில் நடைபெறும் இக் கூட்டத்தில் நடப்பு வருட உத்தியோகத்தர்கள் தெரிவும் எதிர்காலத்தில் வாசகர் வட்டங்கள் தொகுதிவாரியாக அமைப்பது பற்றியும் ஆலோசிக்கப்படும்.

# இப்படியும் நடக்கிறது

இறைவன் எங்கு இருப்பான்?

''இறைவன் தூணிலும் இருப்பான், துரும்பிலும் இருப்பான்; மலையிலும் இருப்பான், மடுவிலும் இருப்பான்.''

அதாவது இறைவன் எங்கும், எதிலும், பல ரூபங்களிலும் இருப்பான் என்பது ஆன்றோர் வாக்கு.

தந்தை செல்வா ஒரு தடவை சொன்னார் ..... ''தமிழ் மக்களை இறைவன் தான் காப்பாற்றவேண்டும்'' என்று.

இப்பொழுது,அவர்கள்தான்' பலரூபங்களில் வருவதாக மக்கள் பயத்துடன் பேசிக்கொள்கிறார்கள். இறைவனுக்கே வெளிச்சம்.

★ ★ ★

நேற்று ஒரு பரீட்சை பற்றிக் குறிப்பிட்டிருந்தேன் அல்லவா? இது குறித்துச் சற்று ஆழமாக ஆராய்ந்த போது, எமக்குக் கிடைத்த தகவல் தவறானது என்று அறிந்தது மட்டுமல்ல, இத்தகவல் காரணமாகக் கோப்பாய் ஆசிரிய பயிற்சிக் கலாசாலை ஆசிரியமாணவர்கள் மிகவும் மனம்வேதனைப்பட்டதாகஅறிகின்றோம். ஆசிரியர்களின் மனஉளைச்சலுக்கு வருந்துகின்றோம்.

— ஊடுருவி

## 7-வீரர்கள் உதைபந்தாட்டப்போட்டியில் "பொற்பதி" கழகம் முன்னணியில்

(யாழ்ப்பாணம்)

''யாழ். உதைப்பந்தாட்ட லீக்கின் ஆதரவில் யாழ். மாவட்ட விளையாட்டுக் கழகங்களிடையே நடைபெற்று வரும்' 7 வீரர்'' பங்குபற்றும் உதைப்பந்தாட்டச் சுற்றுப் போட்டியில் தற்போதைய நிலையில்கொக்குவில் ''பொற்பதி'' விளையாட்டுக்கழகம் முன்னிலையில் நிற்கின்றது.

கடந்த வாரம் நடைபெற்று முடிந்த உதைபந்தாட்டப் போட்டிகளின் முடிவுகள் பின்வருமாறு:

### வெற்றிக் கோஷ்டிகள்

குருநகர் பாடும் மீன் 'பி' கோஷ்டி வைக்கிங்ஸ் கழகத்தை 2 - 1 கோல்களாலும், அல்லைப்பிட்டி சென். பிலிப்ஸ் பாசையூர் சென். அன்ரனிஸ் 'பி' பிரிவை 1 - 0 கோலாலும் கிறீன்பீல்ட் கழகம் - சென்.அன்ரனிஸ் 'ஏ, பிரிவை 3 - 1 கோல்களாலும், நாவாந்துறை சென். மேரி (டபிள்யூ) அரியாலை 'ஏ' கோஷ்டியை 4 - 2 கோல்களாலும், பாடும் மீன் - யாழ்ா முஸ்லீமை 1 - 0 கோலலும் சென். மேரிஸ் 'பி'-சென் நீக்கிலர்ஸ் கோஸ்டியை 3-2 கோல்களாலும் சென்.மேரிஸ் (டபிள்யூ)- புனிதவளன் கோஷ்டியை 10-2 கோல்களாலும் சென். மேரீஸ் (பி)-பாடும்மீன் கோஷ்டியை 2—1 கோல்களால் பொற்பதி கிறீன்பீல்ட் கோஷ்டியை 2—0 கோல்களாலும் வெற்றிபெற்றன.

### வெற்றி தோல்வி இல்லை

சென். மேரிஸ் 'பி'அரியாலை. 'பி' போட்டியும், சென். நீக்கிலஸ், அரியாலை 'பி' போட்டியும், பொற்பதி பாடும்மீன் போட்டியும் வெற்றி தோல்வியின்றி முடிவடைந்தன.

இப்போட்டிகள் யாவுக்கும் திருவாளர்கள் ஈ. கே. குமாரையா, ஏ. தேவராசா, எம். டி. தம்பிராசா, எம். தேவதாஸ், பி. கா. தம்பிநாயகம், எஸ். மோறீஸ், ஏ. டி. எம். குணசிங்கம், எஸ். செபஸ்ரியாம்பிள்ளை ஆகியோர் மத்தியஸ்தம் வகித்தார்கள். (வி)

# பொலிஸ் - ராணுவ முகாமை மாற்றுமாறு கோரிக்கை

(கிளிநொச்சி)

''கிளிநொச்சி வாழ் மக்களுக்குப் பலவிதத்திலும் இடஞ்சலாக இருக்கும் கிளிநொச்சி பொலிஸ்-இராணுவ முகாமை அப்புறப்படுத்துங்கள். மக்களது நிம்மதியான வாழ்விற்கு உத்தரவாதத்தை அளியுங்கள்.''

இவ்வாறு கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபரை சந்தித்த பிரஜைகள் குழுத் தூதுக்குழுவினர் உருக்கமான வேண்டுகோள் ஒன்றை அரசாங்க அதிபர் என். ஜெயநாதன் மூலம் அரசாங்கத்துக்கு விடுத்துள்ளனர்.

அரசாங்க அதிபருக்கும் பிரஜைகள் குழுவினருக்குமிடையே கிளிநொச்சி மாவட்டத்தின் பல விஷயங்கள் தொடர்பாக ஒரு மணிநேரப் பேச்சுவார்த்தை கச்சேரியில் நடைபெற்றது. அரசாங்க அதிபர் திரு. ஜெயநாதனுக்கு உதவியாக பேச்சுவார்த்தைகளில், மேலதிக அரசாங்க அதிபர் எஸ். அமிர்தலிங்கம் மாவட்ட அபிவிருத்திப் பிரிவு உதவி அரசாங்க அதிபரும், தலைமைப்பீட உதவி அரசாங்க அதிபருமான கே. குணராசா ஆகியோரும் கலந்துகொண்டனர். மாவட்டத் தொழில் துறை அபிவிருத்தி, நகர எதிர்காலம், கிளிநொச்சி வாழ் மலையக மக்களின் முன்னேற்றம் தொடர்பாக பேச்சுவார்த்தைகள் நடைபெற்றன.

## வருடாந்த விழா

(யாழ்ப்பாணம்)

ஏழாலை தெற்கு அ. மி. தமிழ்க்கலவன் பாடசாலை பெற்றோர் தினமும், பரிசளிப்பு விழாவும், பாடசாலை மண்டபத்தில் இன்று வியாழக்கிழமை பிற்பகல் 2. 00 மணிக்கு மானிப்பாய் கல்வி அதிகாரி திரு. ச. தனஞ்செயன் தலைமையில் நடைபெறும்.

பிரதம விருந்தினராக வடமாகாண பிரதம கல்வி அதிகாரி திரு. ஆர். சுந்தரலிங்கமும் சிறப்பு விருந்தினராக உடுவில் உதவி அரசாங்க அதிபர் ஆ. மகாலிங்கமும் கலந்து கொள்வர்.

## பின்னுறுதிக்கட்டளை பற்றிய அறிவித்தல்

யாழ்ப்பாண மாவட்ட நீதிமன்றம்

காலஞ்சென்ற ஊரெழுவைச் சேர்ந்த கந்தையா தங்கசாமி ஐயா பெண் இராஜேஸ்வரி என்பவரின் மரணசாதனமற்ற சொத்து விடயத்தில் கந்தையா தங்கசாமி ஐயா.

மனுதார்

வழ. இல. T. 3773

மேலேயுள்ள இலக்கம் கொண்ட மரணச் சாதன வழக்கு குறிப்பிட்ட மரணமெய்தியவரின் மரண சொத்தை நிருவகிப்பதற்காக மேற்படி நீதிமன்றில் தொடுக்கப்பட்டு அதில் அதற்கிணங்க பின்னுறுதிக் கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

அக்கறையுள்ள ஆள் எவரும் 1984-ம் ஆண்டு வைகாசி மாதம் 18-ம் நாளன்று முற்பகல் 9 மணிக்கு இந்நீதிமன்றின் முன் தோன்றி அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக்கட்டளை ஏன் முற்றுனதாக்கப்படலாகாது என்பதற்குக் காரணம் காட்டுமாறு இத்தால் தேவைப்படுத்தப்படுகின்றார்.

நீதிமன்றக் கட்டளைப்படி,

**கு. குலசிங்கம்**
பதிவாளர்.

வரைந்தவர்:
**ச. அபிமன்னசிங்கம்**
மனுதாரின் சட்டத்தரணி.

காரணம் காட்டும் திகதி 6-12-85 வரை நீடிக்கப்பட்டுள்ளது.

நீதிமன்றக் கட்டளைப்படி,

**கு. குலசிங்கம்**
பதிவாளர்.

2142 24-10-85

**உஷாமினி**
10-30, 2-30, 4-45, 6-45
Chuck Norris
AN EYE FOR AN EYE
விறுவிறுப்பான சண்டைகள்

**எம்பயர்**
7 அடித்திரையில்
10-30, 2-30, 6-30
கமல் - ராதா
**ஜப்பானில் கல்யாணராமன்**

**சரவணபவன்**
மினி சினிமா
(வெலிங்டன் சந்திக்கும் பெருமாள்கோவிலுக்கு மிடையில்)
10-30, 2-30 மட்டும்
சீமா நடித்த
**அவளோட ராவுகள்**
7-00 மணிக்கு
THE TECHNICIAN
(Strictly for Adults)

**லிடோ சினிமா**
10-30, 2-30, 4-30, 6-30
"SPRING BREAK"
(Adults only)
கொழும்பில் பலநாட்கள் ஓடியது. யாழ். நகரில் முதல் தடவை காண்பிக்கப் படுகிறது. பாலியல் காட்சிகள் நிறைந்த படம்.

**வெலிங்டன்**
10-30, 2-30, 4-15, 6-30
கொழும்பில் 100 நாட்களுக்கு மேல் ஓடிய, பாலியல் காட்சிகள், மனிதக்குரங்கின் சாகச விளையாட்டுக்கள் நிறைந்த
TARZAN THE LORD OF APES
(வயது வந்தவர்களுக்கு மட்டும்)
யாழ். நகரில் முதன் முதலாக காண்பிக்கப் படுகிறது.

## இன்றைய பலன்

மாதம்:- கார்த்திகை
திகதி:- 20 (5-12-1985)
கிழமை:- வியாழன்
திதி:- அட்டமி
முன் இரவு வரை
நட்சத்திரம்:- பூரம்
முன் இரவு வரை

மேடம்:- இதயப்பதுதாவில் இன்பத்தின் மின்னல், பிதா வழி ஆதரவு தாராளமாகக் கிடைக்கும். செய்தொழிலாலும் சிறப்புண்டு.

இடபம்: இதமான வாழ்வு, இன்சொல், இவற்றுடன் பெரியோர்களின் ஆதரவும் தாராளமாகக்கிடைக்கும். மேலதிகாரிகளும் உதவிக்கு முன்வருவார்கள்.

மிதுனம்:- இலட்சியப் பாதையை நோக்கிப் பயணம் ஆரம்பமாகும். எதிர்பார்த்த பொருள் வரவும் கிடைக்கலாம். பிள்ளைகளின் முன்னேற்றம் மகிழ்ச்சியைத்தரும்.

கடகம்:- துன்பத்துன்ரேகை படரும். எதிலும் தயக்கம் ஏற்படும். தொல்லைகளும் அதிகரிக்கலாம். நிதானம் வேண்டும்.

சிங்கம்:- மனப்போராட்டம் அதிகரிக்கும். உறவினர் ஒருவர் மீது ஆத்திரம் பிறக்கலாம். இதன் மூலம் உடல் நலமும் பாதிக்கப்படும்.

கன்னி:- குடும்பத்தில் குதூகல நிகழ்ச்சிகள் இடம்பெறும். வெளியிடத்திலிருந்து மகிழ்ச்சிகரமான செய்தியொன்று கிடைக்கலாம். முன்னேற்றமுண்டு.

துலாம்:- அன்னியரின் சகவாசம் சங்கடத்தில் மாட்டிவைக்கும். அவசர முடிவின் மூலம் சில துன்பங்கள் விளையலாம். சகோதரவழி மனச் சஞ்சலமும் உண்டு.

விருச்சிகம்:- நீர்ப்பாசனப் பகுதியில் கடமையாற்றுபவர்களுக்கு சிறப்பான தினம். கல்வியிலும் ஆர்வம் பிறக்கும். வாகன சுகமும் உண்டு.

தனுசு:- மகிழ்ச்சிகரமான தினம். குடும்பத்தில் விருந்தினர் வருகையால் கலகலப்பு ஏற்படும். நீண்டநாள் நண்பர் ஒருவரை மீண்டும் சந்திப்பீர்கள்.

மகரம்:- பணம் பலவழிகளிலும் செலவாகும். அந்நிய நபர் ஒருவரால் ஏமாற்றமடையக்கூடும். பிரயாணத்தின் போது பொருள் தவறக்கூடும். கவனம்.

கும்பம்:- களஸ்திரவழியால் மகிழ்ச்சிக்கும் இடமுண்டு. பிரிந்தவர்கள் மீண்டும் இணைவர். புத்திரவழியாலும் மகிழ்ச்சிக்கு இடமுண்டு.

மீனம்:- தொல்லைகள் தலைதூக்கும். தொழில் புரியுமிடத்தில் ஏமாற்றத்திற்கு இடமுண்டு. அவசர முடிவைத் தவிர்க்கவும்.

**திருமலை**
**வே. ரவீந்திரன்**

## காரைநகர்வடக்கு மின் அபிவிருத்தி வேலைகள்: பொறுப்பாளர் தரும்பதில்

[யாழ்ப்பாணம்[

பாதுகாப்புக் காரணங்களுக்காகப் பலமாதங்கள் யாழ் கோட்டைக்குள் வைக்கப்பட்டிருந்த மின்சார உபகரணங்கள் தமது வேண்டுகோளின் பேரில் கையளிக்கப்பட்டு, மின் அபிவிருத்தி வேலைகள் நடைபெற்று வருவதாக, யாழ் அபிவிருத்திசபையின் காரைநகர் வடக்கு உபஅலுவலக மின்சாரப் பகுதிப் பொறுப்பாளர் திரு. ஆர். என். லோகேந்திரலிங்கம் தெரிவித்துள்ளார்.

தங்கோடை கிராம அபிவிருத்திச் சங்கம், காரைநகர் வடக்கின் மின் அபிவிருத்தி வேலைகள் திட்டமிட்டுத் தாமதப்படுத்தப்படுவதாக வெளிவந்த செய்தியைத் தொடர்ந்து மின்சாரப் பகுதிப் பொறுப்பாளர் பின்வரும் அறிக்கையை விடுத்துள்ளார்.

யாழ்ப்பாண அபிவிருத்திச் சபையின் செயலாளர் என்ற வகையில் யாழ்ப்பாண அரசாங்க அதிபர் திரு. மு. பஞ்சலிங்கம் அதன் உப அலுவலகங்கள் அனைத்திற்கும், மின்சார அபிவிருத்தி வேலைகளை மேற் கொள்வதற்காகவும், புதிய உப மின் நிலையங்கள் அமைப்பதற்காகவும் போதியளவு நிதியை இவ்வாண்டு ஒதுக்கியுள்ளார். அந்தவகையில் யாழ்ப்பாண அபிவிருத்திச்சபையின் உப அலுவலகங்களில் ஒன்றான காரைநகர் வடக்கு உப அலுவலகத்திற்கும் சுமார் எட்டு லட்சம் ரூபாவை ஒதுக்கித் தந்துள்ளார். இந்த நிதி ஒதுக்கீடானது எமது சிபாரிசின் பேரிலேயே செய்யப்பட்டுள்ளது என்பதையும், தங்கோடை கிராம அபிவிருத்திச் சங்கத்திற்கும் இவ்வளவு பெருந்தொகையான நிதி ஒதுக்கீட்டிற்கும் எவ்விததொடர்புமே இல்லை என்பதையும் அனைவரும் அறிவார்கள்.

காரைநகர் வடக்கு உபஅலுவலகத்தின் மின்சாரப்பகுதிக்குப் பொறுப்பான மின் தொழில் நுட்ப உத்தியோகத்தர் என்ற வகையில் எனது தொழில்நுட்ப ரீதியிலான அறிக்கைகளையும் மேற்கோள்களையும் கொண்டே எமது உப அலுவலகத்தின் அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தர் திரு. வி. குணரத்தினம், யாழ்ப்பாண அரசாங்க அதிபருக்கு இந்நிதி ஒதுக்கீடுகளை உடனடியாக செய்யும்படி வேண்டுகோள் விடுத்திருந்தார். அதை செவி சாய்த்த அரசாங்க அதிபர் மற்றைய அதிகாரிகளோடும் தலைமைக் காரியாலய மின்சார அத்தியட்சகர் திரு. நற்குணமாணிக்கத்தோடும் கலந்தாலோசித்து எமது அலுவலகத்திற்கு எட்டு லட்சம் ரூபாவரையில் நிதி ஒதுக்கீடு செய்தார்.

நிதி ஒதுக்கீடு செய்யப்பட்ட பின்னர், மின்சார வீதி வேலைகளுக்குத்தேவையானபொருட்களுக்கு கட்டளைகள் அனுப்பட்டன. உப மின் நிலைய அமைப்பு வேலைகளுக்காக இலங்கை மின்சாரசபையோடு தேவையான கடிதத்தொடர்புகள் மேற்கொள்ளப்பட்டு அவர்களால் கேட்டுக்கொண்டபடி பல விபரக் கோவைகள் அனுப்பபட்டுள்ளன.

வீதி வேலைகளுக்கு தேவையான அலுமினியக் கம்பிகளும், இதர மின் பொருட்களும் பாதுகாப்புக் காரணங்களுக்காக பல மாதங்கள் யாழ்ப்பாணக் கோட்டையினுள்ளே களஞ்சியப்படுத்தப்பட்டன. எமது வேண்டுகோளுக்கிணங்க அலுமினியக் கம்பிகளும், இதர மின் பொருக்களும் தற்போது எமக்குவழங்கப்பட்டுள்ளன. மின்சாரப் பொருட்கள் கோட்டையிலிருந்து எமது உபஅலுவலகத்திற்கு வந்தநாட்தொடக்கம் தொடர்ந்து மின்சார அபிவிருத்தி வேலைகள் நடைபெற்றவண்ணமிருக்கின்றன.

தற்போதைய இக்கட்டான சூழ்நிலையிலும், நனும் எமது மின்சாரப்பகுதி ஊழியர்களும் கூடிய கவனமெடுத்து இவ்வேலைகளைச் செய்துவந்தோம், செய்தும் வருகின்றோம். காரை வடக்கு உப அலுவலகத்தின் மின்சாரத்திட்டத்தை ஒழுங்காக நிர்வகிக்கவேண்டிய பொறுப்பு எங்களுடையது என்பதை நாங்கள் நன்கு அறிவோம். (மா)

## இன்று பரிசளிப்பு விழா

(யாழ்ப்பாணம்)

யாழ். இந்து ஆரம்பப்பாடசாலை வருடாந்த பரிசளிப்பு விழா இன்று மாலை 2-30 மணியளவில் யாழ். இந்துக் கல்லூரி குமாரசாமி மண்டபத்தில் அதிபர் திரு. மு. திருஞானசம்பந்தபிள்ளை தலைமையில் நடைபெறுகின்றது.

பிரதம விருந்தினராக வடமாநில வித்தியாதிபதி திரு. ம. சிமியாம்பிள்ளை கலந்து கொள்ளுவார். நல்லூர் வட்டாரக் கல்வி அதிகாரி திரு. சு. சிவநாயமூர்த்தி சிறப்பு விருந்தினராகக் கலந்துகொள்ளும் இவ்விழாவில்; புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த பத்தொன்பது பேர் உட்பட பல மாணவர்களுக்குரிய பரிசுகள் வழங்கப்படுகின்றன. மாணவர்களின் கலை நிகழ்ச்சிகளும் இடம்பெறுகின்றன.

**விற்பனையும் கண்காட்சியும்**
**6, 7, 8ந் திகதிகளில்**

அலங்கார கேக் வகைகள், ரெடிமேட் ஆடைகள், படுக்கை விரிப்புகள், வீட்டுப் பாவனைப் பொருட்கள், சிங்கர் தையல் மெசின், மின்சார உபகரணங்கள்

**கறு அரிசி ஆலைக்கு அருகில்**
நீதிமன்ற வீதி, மல்லாகம்.

(2154)

## உதவி ஆசிரியர் வெற்றிடம்

ஈழநாடு ஆசிரிய பீடத்தில் கடமையாற்றுவதற்கு பத்திரிகைத்துறை அனுபவம் உடையவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன. விண்ணப்பதாரர் கல்வி, அனுபவம், கிராமசேவை அலுவலகரின் வதிவிடச் சான்றிதழ் ஆகியவற்றின் போட்டஸ்ரற் பிரதிகளுடன் 10-12-85க்கு முன் விண்ணப்பிக்கவும். ஆங்கில அறிவு விரும்பத்தக்கது.

விண்ணப்பங்களை அனுப்பவேண்டிய முகவரி:-

நிர்வாகி,
''உதவி ஆசிரியர் வெற்றிடம்'',
ஈழநாடு, த. பெ. எண் 49,
யாழ்ப்பாணம்.

[2140]

## 1-வது ஆண்டு நினைவஞ்சலி

**திருமதி**
**கமலாசனி கிருஷ்ணபிள்ளை**

தோற்றம்:
17-05-1941
மறைவு:
16-11-1984
திதி: 05-12-1985



இல்லத்தின் ஒளி விளக்காய் துலங்கி எம்மையெல்லாம் வழி நடத்திய எமது இதய தெய்வமே! நீங்கள் மறைந்து ஓராண்டென்ன ஓராயிரம் ஆண்டாயினும் நாம் உங்கள் நினைவை மறவோம். உங்கள் பாதக்கமலத்தை எமது கண்ணீரால் அஞ்சலிக்கின்றோம். உங்கள் ஆன்மா இறைவனடியில் சாந்தி பெறுக.

**கணவன், பிள்ளைகள்.**

32/2, பிரப்பங்குளம் வீதி,
யாழ்ப்பாணம்.

2159

## பயிலுநர்களுக்கான வெற்றிடம்

''ஈழநாடு'' ஆசிரிய பீடத்தில், சேர்ந்து பத்திரிகைத் துறையில் பயிலுநராகக் கடமையாற்றுவதற்குச் சில வெற்றிடங்கள் உண்டு.

பின்வரும் தகைமைகள் இருப்போர் பிறப்புச் சான்றிதழ், கல்விச்சான்றிதழ், நற்சான்றிதழ், கிராமசேவை அலுவலரின் வதிவிடச் சான்றிதழ் ஆகியவற்றின் போட்டஸ்ரற் பிரதிகளுடன் சொந்தக் கையழுத்தில் 12-12-85க்கு முன் விண்ணப்பிக்கவும்.

★ வயதெல்லை: 22 வயதுக்கு மேற்படாதவராக இருத்தல் அவசியம்.

★ கல்வித்தகைமை: க. பொ. த. (உயர்தர)பரீட்சை சித்தியெய்தியவராகவும். ஆங்கில அறிவு உடையவராகவும் இருத்தல் வேண்டும்.

விண்ணப்பங்களை பின்வரும் விலாசத்துக்கு அனுப்பவும்.

நிர்வாகி,
''பயிலுநர் வெற்றிடம்'',
ஈழநாடு, த. பெ. எண் 49,
யாழ்ப்பாணம்.

(2139)

ஈழநாடு
THE EELANADU
NATIONAL TAMIL DAILY

# கிளிநொச்சியில் இராணுவத்தினர் தொடர்ந்து 'வேட்டை!'

(கிளிநொச்சி)

மோட்டார் சைக்கிளில் வந்த இளைஞர்களை நோக்கி ஆயுதப்படையினர் துப்பாக்கி பிரயோகம் செய்ததில் காயமடைந்த இளைஞர்கள் பிரஸ்தாப சைக்கிளை கைவிட்ட நிலையில் தப்பி ஓடிவிட்டனர்.

இதேவேளை; சம்பவ இடத்தில் தேடுதல் நடத்தியபடையினர் பல இளைஞர்களை கைது செய்தனர். கிளிநொச்சி கரடிப்போக்கில் இச்சம்பவங்கள் இடம் பெற்றன.

தனியார் வாகனங்களில் கிளிநொச்சி நகரை நோக்கி வந்து கொண்டிருந்த இராணுவத்தினர்; இளைஞர்களால் கைவிடப்பட்ட மோட்டார்களில் டலர், வெளிநாட்டுக் சைக்கிள், துண்டுப்பிரசுரங்கள் முதலானவற்றையும் கைதான இளைஞர்கள் சிலரையும் ஆனையிறவு இராணுவ முகாமுக்குக் கொண்டு சென்றுள்ளனர்.

கடந்த சில தினங்களாக கிளிநொச்சி மாவட்டத்தில் ஆயுதப்படையினர் தமது தேடுதல் வேட்டைகளை தீவிரப்படுத்தியுள்ளனர்.

கடந்த மாதம் மட்டும் சுமார் 50 இளைஞர்கள் கைது செய்யப்பட்டு ஆனையிறவு, கோட்டை முதலான முகாங்களில் விசாரணைக்காக தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். ஒரு மாத இடைவெளியில் சுமார் 10 பேர் துப்பாக்கிச் சூட்டுக்கும் பலியாகியும் உள்ளனர்.

# பலியெடுக்கப்படுவதை கண்டித்து பிரசுரம்!

(யாழ்ப்பாணம்)

''தோழர் றேகனின் படுகொலையைக் கண்டித்து வவனியாவில் பூரண ஹர்த்தால் நடத்தியது, பூவரசங்குளத்தில் இருந்து நெளுக்குளம் வரைக்கும் நீண்ட ஊர்வலம் நடத்தியது, சவக்காலையில் திரண்டுவந்து கண்ணீர் உகுத்தது, அஞ்சலி செலுத்தியது யார்?''

இவ்வாறு ''தீரவிசாரித்து தண்டனை வழங்குங்கள்'', ''போராளிகள் பலியெடுக்கப்படுவதை அனுமதிக்கிறீர்களா?'' என்று தலைப்பிடப்பட்டு வெளியாகியுள்ள துண்டுப் பிரசுரத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

'ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி (ஈ. பி. ஆர். எல். எவ்.) இயக்கத்தினரால் வெளியிடப்பட்டுள்ள பிரசுரத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

''வவனியா உதயா அரிசி ஆலை முதலாளியிடம் நாம் வற்புறுத்தி உதவி கோரினோம், புலிகளுக்குச் சவாலாக ஆலை உரிமையாளரையும், மகனையும் கொன்றுவிட்டோம் என 1- 12.85ல் 'மக்களோடு இணைந்து மக்களுக்காகப் போராடுவோம்'' என ஒரு மக்கள் பிரசுரத்தை புலிகளின் அரசியற் குழு வெளியிட்டுள்ளது.

''அரிசி ஆலை முதலாளியின் மகன் எமது ஸ்தாபனத்தில் பயிற்சி பெற்றவர். அவரின் ஆலோசனையின் பேரில் அவரது தந்தையாரிடம் உதவி கோரினோம். வவனியாவில் உள்ள அகதிகள் முகாமில் வாழும் மக்களின் அடிப்படையான உணவுப் பிரச்னையைத் தீர்ப்பதற்காக இவ்உதவியை நாம் உபயோகித்தோம். அகதிகள் முகாமிற்கு நாம் உதவியதை தோழர் றேகனின் அஞ்சலி உரையில் வவனியா குடிமகன் ஒருவர் குறிப்பிட்டுப் பேசியதை இங்கு நினைவுபடுத்துகிறோம்.

''மீண்டும் உதவி கோரிச் சென்ற எமது தோழர்களை முதலாளியின் கையாட்களுடன் சேர்ந்து நையப்புடைத்தனர். தாம் கொள்ளையரை விரட்டியடித்து விட்டதாக வவனியா மக்களுக்கு கூறியதை விசாரித்து தெளிவுபடுத்தும் பொருட்டு உதயா அரிசி ஆலைக்கு எமது தோழர்கள் சென்றனர்.

''அப்போது முதலாளியையும், கையாட்களையும் அவர்கள் தூண்டிவிட்டு தாமும் அவர்களுடன் கூட்டுச்சேர்ந்து கத்திகள், பொல்லுகள், கம்பிச்சுருள்களால் எமது தோழர்களைத் தாக்கினர். இப் பதற்றமான சூழ்நிலையில் தோழர்களின் கைகளிலிருந்த ஆயுதத்தைப் பறிக்க முயன்ற முதலாளியும் அவரதுமகனும் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகினர். இம்மரணத்தைநாம் பொறுப்பேற்கிறோம். துரதிஷ்டவசமாக நேர்ந்த இச்சம்பவத்தில் புலிகள் வகித்த பாத்திரமும் இம்மரணத்திற்கான காரணமென்பதை வலியுறுத்துகிறோம்.

''தீர விசாரித்து தண்டனை வழங்குங்கள்'' மின்கம்பத்தில் கட்டப்பட்டு தனக்கு முன்னால் துப்பாக்கிகளுடன் நின்ற புலிகளிடம் வேட்டுக்கள் தீர்க்கும் முன்னர் தோழர் றேகன் விடுத்த கடைசி வேண்டுகோள் இது.''

இப்பிரசுரத்தில் றேகனின் புகைப்படமும் காணப்படுகிறது. (ஐ)

# 'கருவாடு' வியாபாரிகளும் தமிழீழ ஆதரவாளர்களாம்

(கொழும்பு)

''கொழும்பு பாங்ஷால் வீதியிலுள்ள கருவாடு வியாபாரிகாரர்கள். இவர்கள் தமிழ் ஈழத் தீவிரவாதிகளுக்கு உதவி புரிந்து வருகின்றார்கள்''

இவ்வாறு, தெவிநுவர பாராளுமன்ற உறுப்பினர் திரு. கலபத நேற்று பாராளுமன்றத்தில் பேசுகையில் தெரிவித்தார்.

# கிளிநொச்சியில் தொடரும் திருட்டுச் சம்பவங்கள்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி நகரில் உள்ள மணிக்கூட்டுக்கடை, இரவுவேளை உடைக்கப்பட்டு மணிக்கூடுகள், ரொக்கப் பணம் உட்பட வேறு பொருட்களும் கொள்ளையடிக்கப்பட்டுள்ளன.

கிளிநொச்சி நகரில் அண்மைக்காலமாக கடை உடைப்புத் திருட்டுக்கள் அதிகரித்து வருகிறது. பிரபல நகை அடைவு கடை ஒன்றும் இரவு நேரம் உடைக்கப்பட்டு நகை பணம் கொள்ளையடிக்கப்பட்ட சம்பவமும் இடம் பெற்றுள்ளது.

கொள்ளைகளால் பாதிக்கப்பட்ட வர்த்தகர்கள் கிளிநொச்சி வர்த்தக சங்கத்திடம் புகார் தெரிவித்துள்ளனர். இதையடுத்து நகர் காவல்ப் படை ஒன்றை அமைக்க வர்த்தக சங்கம் முயற்சி எடுத்து வருகிறது.

# சின்னக்கடையில் மணிபேர்ஸ்மாயம்!

(சுண்டுக்குளி)

கடையில் சாமான் வாங்கிக் கொண்டிருந்தவரின் ''மணிபேர்ஸ்' மாயமாக மறைந்து விட்டது!

யாழ். கச்சேரியில் பிரதம சிறுப்பராக க்கடமையாற்றும் திரு. நா. பத்மநாதனுக்கே யாழ். சின்னக்கடையில் நேற்று இந்தச் சம்பவம் நடந்துள்ளது.

இந்தப்பேர்ஸ்க்குள் சிருப்பரின் தேசிய அடையாள அட்டை, உத்தியோக பூர்வ அடையாள அட்டை இவைகளுடன் சிறிதளவு பணமும் இருந்ததாகப் புகார் செய்யப்பட்டுள்ளது.

# பாக்கீர் மாக்காரின் உள்ளக் குமுறல்!

(கொழும்ப)

''இலங்கைப் பாராளுமன்றத்தில் இரண்டாவது சபை ஒன்று அமைக்கப்படும் என்றும், அதில் என்னைத் தலைவராக நியமிப்பதாகவும் உறுதி அளிக்கப்பட்டது. ஆனல் வருடங்கள் இரண்டு கடந்துவிட்டன. அந்தவாக்குறுதி இன்று நிறைவேற்றப்படவில்லை''.

இவ்வாறு, இலாகா அற்ற அமைச்சர் அல்ஹாச் பாக்கீர் மாக்கார் நேற்று தமது உள்ளக்குமுறலை பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

இலாகா அற்ற அமைச்சுக்கான நிதி ஒதுக்கீட்டு குழு நிலை மீதான விவாதத்தில் கலந்துகொண்டு பேசுகையில் அவர் இவ்வாறு தெரிவித்தார்.

''நான் ஐ. தே. க. வின் ஆரம்ப உறுப்பினர். இது வரை வழங்கப்பட்ட எந்தப் பதவியும் பொறுப்புடன் செய்துள்ளேன்'' என்றும் அவர் கூறினர்.

# திருமலைத்....

)1-ம் பக்கத் தொடர்ச்சி)

டிஷ் சஞ்சிகையான 'கஸட்'டிலும் வெளியிட்டுள்ளனர்.

சஞ்சிகையில் வெளியான விபரங்கள் பெரும் அதிர்ச்சியான தகவல்களைக் கொண்டிருப்பதுடன், திருகோணமலையில் மட்டுமின்றி தமிழ்நாட்டில் தமிழீழ ஆதரவாளர்களுடன் இரண்டு பத்திரிகையாளர்களும் தங்கியிருந்த விபரங்களும் வெளியாகியுள்ளன.

மேற்படி இரு பிரிட்டிஷ் பத்திரிகையாளர்களின் இலங்கை விஜயம் தொடர்பாக இப்பொழுது உயர்மட்ட பொலிஸ் விசாரணை நடைபெற்று வருகிறது.

திருகோணமலைச் சம்பவங்கள் பற்றிய இவர்களது வீடியோ தகவல்படம் இன்று பிரிட்டிஷ் ஒளிபரப்பில் இடம் பெறுகிறது.

# ஒரு சின்னக் குடும்பத்துக்கு ஏற்பட்ட பெரிய சோதனை!

(யாழ்ப்பாணம்)

தாம்பட்ட கடனைத்தீர்க்க இருக்கிறவீட்டையும், காணியையும், ஈடுவைத்துப்பெற்ற 28 ஆயிரம் ரூபாவை கொள்ளை அடித்துவிட்டார்களே என்று கலங்குகிறது ஒரு குடும்பம்!

கொக்குவில் மேற்கு, சி. எம் எஸ். வீதியிலுள்ள க. சற்குருநாதன் குடும்பமே இப்பரிதாப சம்பவத்துக்கிலக்கானது.

இவர் யாழ்ப்பாணத்திலுள்ள தனியார் ஸ்தாபனம் ஒன்றில்வேலைசெய்கிறார். நகைகளை அடகுவைத்து, வீடொன்றைக் கட்டத்தொடங்கினர்.

அவ்வீட்டையும் கட்டிமுடிக்க வசதியில்லாமல் போகவே, வீட்டையும் காணியையும் அப்பகுதியில் உள்ள ஒருவருக்கு ஈடுவைத்து 28 ஆயிரம் ரூபாவைப் பெற்றார். சம்பவதினம் காலை அவர் வேலைக்குச் சென்றவே, அவரின் மனைவி சரோஜினிதேவி (35 வயது)யும், சகோதரிமுற்ற ஒருவயதுக் குழந்தையும் வீட்டிலிருந்தனர். அச்சமயம் கைத்துப்பாக்கிகளுடன் நீளக்காற்சட்டை அணிந்த இரு இளைஞர்கள் அவ்வீட்டுக்கு வந்து, தனிமையிலிருந்த அப்பெண்ணை துப்பாக்கிமுனையில் அவர் கைகளைப்பிடித்து இழுத்து "ஈடுவைத்து எடுத்த பணம் எங்கே" என்று பயமுறுத்திக் கேட்டனராம். பீதியடைந்த அப்பெண், கணவரின் ஒன்றுக்குள் வைத்திருந்த அப்பணத்தை அப்படியே எடுத்துக் கொடுத்தாராம்.

"சத்தம் போட்டால் சுட்டுப்போடுவோம்" என்று மீண்டும் அவ்விருவரும் பயமுறுத்திவிட்டு அவர்கள் கம்பிநீட்டிவிட்டனராம்.

இப்பொழுது தாம்பட்ட கடனைத்தீர்க்க என்ன செய்வதென்று தெரியாது கலங்குகிறது அக்குடும்பம்! (மா)

# மற்றுமொருவருக்கு மரணதண்டனை

(மட்டக்களப்பு)

சமூக விரோதச் செயல்களில் ஈடுபட்டதாகக் கூறப்படும் ஒருவர், இனந்தெரியாத நபர்களால் துப்பாக்கியால் சுட்டுக் கொல்லப்பட்டார்.

ஆரையம்பதியைச் சேர்ந்த தவராஜா என்பவரே சுட்டுக் கொல்லப்பட்டவராவார்.

நேற்று முன்தினம் இரவு ஆரையம்பதி ஆஸ்பத்திரி வாயிலிலுள்ள மரமொன்றில் இறந்தவரின் சடலம் கட்டப்பட்ட நிலையில் காணப்பட்டது. தலையில் சூட்டுக்காயம் இருந்தது. இவருக்குப் பக்கத்தில் போடப்பட்டிருந்த கடதாசித் துண்டில், 'தீவிரவாதிகளின் நடமாட்டத்தைப் பற்றி இரகசியப் பொலிசாருக்குத் தகவல் கொடுத்ததால் இவருக்கு மரணதண்டனை வழங்கப்பட்டுள்ளது' என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

# இன்று திறப்புவிழா

(யாழ்ப்பாணம்)

யாழ். சென். பற்றிக்ஸ் கல்லூரியின் 'ஆயர் தியோகுப்பிள்ளை ஸ்(ரடிய'த்தை இன்று மாலை 3-30 மணிக்கு யாழ். மாநகரசபை ஆணையாளர் சீ. வி. கே. சிவஞானம் திறந்துவைப்பார்.

அத்துடன் இக்கல்லூரியின் மாணவர் விடுதிக்காக புதிதாக அமைக்கப்பட்டுள்ள கட்டிடத்தை யாழ். ஆயர் திறந்து வைப்பார்.

# நவசமசமாஜ கட்சியின் ஆண்டுவிழா

(கொழும்பு)

இனப்பிரச்சினைக்கு விரைவில் நிரந்தரத்தீர்வுகாணவேண்டும் என்னும் தீர்மானம் இம்மாதம் 17ம் திகதி நடைபெற விருக்கும் நவசமசமாஜக்கட்சியின் ஆண்டு விழாக்கூட்டத்தில் நிறைவேற்றப்படவுள்ளது.

கட்சித் தலைவர் திரு. வாசுதேவ நாணயக்காரா தலைமையில் கொம்பனித்தெரு டிமெல் பூங்காவில் நடைபெறவிருக்கும் இக்கூட்டத்தில் சர்வதேசப் பிரச்சினை, 'தொழிலாளவர்க்கமும் சோஷலிச ஆட்சியும்' ஆகியன பற்றியும் ஆராயப்படும்.

இந்த ஆண்டுவிழாவையொட்டி இம்மாதம் 16ம், 17ம் திகதிகளில் புதிய நகரமண்டபத்தில் கண்காட்சியும் இடம்பெறவுள்ளது.

இவ்வாண்டுவிழாவில் கலந்து கொள்ள நவசமசமாஜக்கட்சியின் யாழ். மாவட்ட இணைப்புக்குழுச்செயலாளர் திரு. ஏ. கே. அண்ணமலை தலைமையிலான கட்சிப் பிரதிநிதிகள் குழு செல்லுகின்றது. (மா)

இப்பதிரிகை ''ஈழநாடு'' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேற்கு வீதி, 63-ம் இலக்க அச்சகத்தில் 1985-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 5-ம் திகதி அச்சிட்டு வெளிபிடப்பட்டது. Registered as a News Paper at the Gɔneral Post Office Sri Lanka under number B10036/81. Eclantdu P. O. Box: 49, Telegram, Edlanadu, Telephone: 22389-24126.

## மரண அறிவித்தல்
### முதலியார் கார்த்திகேசு

வல்வெட்டித்துறையைச் சேர்ந்த இளைப்பாறிய ஓவசியர் முதலியார் கார்த்திகேசு [ஜே. பி.] U. K.யில் காலமானார். இவர் ஞானசகுந்தலாவின் அன்புக் கணவரும், டாக்டர் இராஜேந்திரன் [U.K.], இந்திராணி, பாலேந்திரம் [இந்தியா], குலேந்திரன் [U.K.], உமாராணி [U.K.], ரூபராணி [U. K.], புவனராணி [U. K.], ஹரீந்திரன் [U.K.], செல்வராணி[U.K.], ஞானேந்திரன் [U.K.] ஆகியோரின் அருமைத்தந்தையும், டாக்டர் சபாபதி, விவேகானந்தன் [U. K.], டாக்டர் தங்கரூபன் [U. K.], டாக்டர் குணனந்தன் [U.K.], நவசோதி [அவுஸ்திரேலியா], டாக்டர் இந்திராதேவி [U. K.], சுதந்திராதேவி, விஜயகிருஷ்ண [U. K.], ஞானம் [U. K.] ஆகியோரின் மாமனும் ஆவார். ஈமக்கிரியைகள் இன்று வியாழக்கிழமை 40, Darons Way Combe ton Cambridge, U.K.யில் நடைபெறும்.

தகவல்: திருமதி இ. சபாபதி.

[2172]